Regd. No. M. 4593. 'KUDI ARASU மாநாட்டு மலர் 16 பக்கங்கள்

குடி அரசு

Estd. 1924. தனிப்பிரதி விலை அ. 0-1-6
வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

மலர் 18 பார்த்திப, 22-9-1945 புரட்டாசி 6உ. இதழ் 50

நவராத்திரி

II

பார்வதி பரமேஸ்வரனைக் குறித்துத் தவமிருந்து வரம்வாங்கி மகிஷாசுரனைக் கொன்றதாகவும், விஷ்ணு வைகுண்டத்திலிருந்து திருப்பதிக்கு வந்துவிட்டமையால் லெட்சுமி திருப்பதி சீனிவாசப் பெருமாளை அடையவேண்டி அவர் மேலுத்தரவாக பூலோகத்தில் அவதாரம்செய்து ஒன்பது ராத்திரியும் தவம் செய்து சீனிவாசப்பெருமாளை விவாகம் செய்துகொண்டிருந்ததாகவும், கதைகளிருக்கின்றன. சரஸ்வதிக்கு அவ்விதத் தனிக் கதைகளில்லை. சரஸ்வதி தன் புருஷனான பிர்மாவை யடைய ஒன்பது நாள் தவமிருந்து பிர்மாவை யடைந்ததாகமட்டும் சொல்லப்படுகிறது. சரஸ்வதி தவமிருந்த ஒன்பது நாட்களுக்கு முன் எங்கிருந்தாளோ, பிர்மா எங்கிருந்தாரோ பின் எங்கிருந்து ஒன்று கூடினார்களோ இதற்கும் கதைகளில்லை. லெட்சுமியை விஷ்ணு வைகுண்டத்தில் தனியாக விட்டு வந்து விட்டதினால் விஷ்ணுவை யடைய பூலோகத்தில் கலியாணம் செய்துகொள்ள லட்சுமி தவமிருக்க வேண்டியதாயிற்று. புருடர்கள் வேறு ஊருக்குக் குடிபோகையில் தங்கள் மனைவியர்களையும் கூடவே கூட்டிக்கொண்டு வந்துவிட்டால் அந்தப் பெண்களுக்கு நவராத்திரி பூசை செய்யவேண்டிய அவசியமில்லை என்பது அந்தக் கதையாலே விளங்குகிறது.

பார்வதி, லெட்சுமி, சரஸ்வதி இவர்களுக்கு வேண்டிய காரிய சித்திக்குத் தங்கள் புருஷர்களை வேண்டித் தவமிருந்து காரியசித்தியடைந்தார்கள். இவர்கள் செய்த பூஜையை நாம் இவர்கள் பேரால் இவர்களுக்கே செய்கிறோம். அந்தப் பூஜைக்குப் பலன் கொடுப்பவர்கள் இவர்களா? இவர்களின் புருஷர்களான மும்மூர்த்திகளா என்பதும் தெரியவேண்டிய விஷயங்களாகும். அம்மூவர்களும் தங்கள் புருஷர்களை வேண்டித் தவமிருந்து தங்களுக்கு வேண்டியதை நிறைவேற்றிக்கொண்டார்கள் என்று கதைகளிருக்கிறதேயல்லாமல் தங்கள் பத்தினிமார்களைக் குறித்துத் தவமிருப்பவர்களுக்குக் காரிய சித்தியான வரங்களைக் கொடுப்பதற்கு ஒரு சக்தியோ, உத்திரவுகளோ தங்கள் புருடர்களிடமிருந்து பெற்றுக் கொண்டதாகக் கதைகளில்லை. சத்தியமாய் நிர்மலமொன்றுதான், தனித்தா ஆத்தியான முதல் ஒன்றுதான், எல்லாம் பூஜையும் எம்பெருமானுக்கே சேருகிறதென்பதும் எதார்த்தமாகவேயிருக்கட்டும். யார் பலன் கொடுத்தாலும் நமக்கும் ஒன்றுதான். என்றாலும் இதுவரையிலும் நம்முடைய நாடு செய்துவந்த அந்தப் பூஜையால் நன்மை யடைந்திருக்கிறதா? பூஜையின் கர்த்தாக்களான தெய்வங்கள் தான் அந்தப் பூஜையை ஏற்றுக்கொண்டிருக்கின்றனவா? ஏற்றுக் கொண்டிருந்தால் வருஷா வருஷம் செய்யும் அந்தப் பூஜையில் நாம் கல்வி, செல்வம், பல தொழில் செய்யும் ஆயுதங்கள், முதலியவைகளில் விருத்தியடைந்திருக்கவேண்டுமே? அப்படியில்லாவிட்டால் அந்தப் பூஜை பிரயோஜனப்படவில்லை என்று சொல்லுவதில் தப்பில்லையே? நமது நாட்டின் முன் நடந்திருக்கும் அநுபோகங்களும், இப்பொழுதிருக்கும் நிலைமையும் ஆலோசித்துப் பார்த்தால் நமது பூஜைக் கிரமத்தின் சாஸ்திரங்களும், அதை ஆதாரமாகக் கொண்டு நடத்தும் கிரியைகளும் அநுபோகத்தில் பலனளிக்காமலிருக்கையில், அதைத் தள்ளிவிட்டு அதற்காகச் செலவு செய்யும் பொருளைக் கல்விக்கும், தொழில் அபிவிருத்திக்கும் செலவுசெய்யுங்களென்று சுயமரியாதைச் சங்கம் சொல்லுவதில் குற்றமென்ன? சரஸ்வதி, துர்க்கை, லெட்சுமி இவர்களுக்குச் செய்யும் பூசையும், அந்தப் பூஜைக்காகப் பார்ப்பனருக்குக் கொடுக்கும் தானதர்மங்களும் பிரயோஜனப்படவில்லை என்பதற்குக் கீழே சொல்லப்படும் காரணங்களை கவனித்துப் பாருங்கள்.

நமது தென்னாட்டிலுள்ள ராஜாக்கள், ஜெமீன்தார்கள், மிட்டா, பட்டாதார்கள், கோவில்கள், சில பணக்காரர்கள் வீடுகள் முதலிய இடங்களில் நவராத்திரி உற்சவத்தைக் கொண்டாடுகிறார்கள். அதில் மைசூர் ராஜாவே முதன்மை வகித்திருக்கிறார். மைசூருக்குப் பல ஊர்களிலிருந்து அந்த உற்சவத்திற்கு ஜனங்கள் போகிறார்கள். முதல்முதல் துர்க்கா லெட்சுமி சரஸ்வதீப்யோ நமோவென்று மந்திரத்தைச் சொல்லிப் புரோகிதர்களால் பூஜைகள் ஆரம்பிக்கப்படுகின்றன. பல பார்ப்பனர்கள் வேதகோஷம் செய்கிறார்கள். சில பார்ப்பனர்கள் பூஜைக்கு வேண்டிய சாமக்கிரியைகளை வரிசை தப்பாமல் எடுத்துக் கொடுக்க மதச் சின்னமணிந்துகொண்டு வரிந்து கட்டி நிற்கிறார்கள். பலர் மேற்

(தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க)

வாருங்கள்! வாருங்கள்!!

திருச்சிக்கு வாருங்கள்!

செப்டம்பர் 29, 30 தேதிகளில், திருச்சி புத்தூர் மைதானத்தில்
நடைபெறப்போகும்

17-வது மாகாண திராவிடர்கழக—4-வது மாகாண சுயமரியாதை

மாநாடுகளில்

வந்து பங்கு கொள்ளுங்கள்.

★

திராவிடர் கழக (ஜஸ்டிஸ்) மாநாட்டிற்கு

தலைவர்:

பெரியார் ஈ. வெ. ராமசாமி

திறப்பாளர்: என். அர்ச்சுனன்,
கொடிஉயர்த்துவோர்: இந்திராணி பாலசுப்ரமணியம்,
வரவேற்புத் தலைவர்: டி. பி. வேதாசலம்.

சுயமரியாதை மாநாட்டிற்கு

தலைவர்:

தோழர் டி. சண்முகம்

திறப்பாளர்: கே. கே. நீலமேகம்,
கொடியேற்றுபவர்: கனகம்மையார் ராமசாமி,
வரவேற்புத்தலைவர்: சி. என். அண்ணாதுரை.

திருச்சி மாநாடுகள்

சில குறிப்புகள்

1. பல ஆயிரம் மக்கள் குழுமியிருக்க ஒலி பெருக்கி, மின்சார விளக்குகளுடன் கூடிய புதிதாக புத்தூர் மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள "பன்னீர் செல்வம்" பந்தலில் மாநாடுகள் நடைபெறும்.

2. பெரியார் தொண்டர்படை அணிவகுப்பு கொண்ட ஊர்வலம் 29-9-45 காலை 9-மணிக்கு தெப்பக்குளத்திற்கருகிலிருந்து தொடங்கி கடைவீதி வழியாகச் சென்று மாநாட்டுப்பந்தலையடையும்.

3. வெளியூர்ப் பிரதிநிதிகளுக்கு உணவு வசதிகள் மாநாட்டுப் பந்தலுக்கருகிலேயே அமைக்கப்பட்டுள்ள உணவு விடுதிகள் மூலம் ஏற்பாடாகியுள்ளன. இரவில் தங்கியிருக்க இடவசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

4. பதினாயிரக்கணக்கான பெண்கள் எதிர்பார்க்கப்படுகிறார்கள். முன்னதாக எழுதினால் பெண்கள் தங்கியிருக்க தனி விடுதிகள் ஏற்பாடு செய்யப்படும். மாநாட்டுப் பந்தலில் பெண்களுக்குத் தனி இடமுண்டு, கட்டணம் இல்லை.

5. புத்தூர் மைதானம் திருச்சி ஜங்ஷனிலிருந்தும், கோட்டையிலிருந்தும் 1½-மைல் தூரத்திலுள்ளது. வெளியூர் அன்பர்கள் யாவரும் ஜங்ஷனில் இறங்குமாறு கோரப்படுகிறது. பெரியார் தொண்டர் படையினர் 28—9—45 காலையிலிருந்து ஜங்ஷன் ஸ்டேஷனிலிருந்து மாநாட்டுக்கு வருவோர்க்கு தக்க துணைபுரிவார்கள்.

6. இருநாட்களுக்கும் பிரதிநிதிக்கட்டணம் ரூ. 1.

பார்வையாளர் (அபிமானிகள்) கட்டணம் அணா 8.

C. N. அண்ணாதுரை,
தி. பொ. வேதாசலம்
அமைச்சர்கள்.

திருச்சிக்கு------

("வேங்காயம்")

செல்லுவோம் திருச்சி நோக்கித்
திராவிடர் திரண்டு வாரீர்!
கொல்லுவோம் ஆத்தி கத்தின்
கொடுமையோ டடிமை பாவம்,
வெல்லுவோம் நமது நாட்டை,
வீணரை விலகி நிற்கச்
சொல்லுவோம், சூழ்ச்சி வெள்ளம்
முறையில் தகும்வாய்ச் செய்வோம்!

நலிந்திடும் கோடி மக்கள்
நலங்கரு தாமல் என்றும்
மலிந்திடும் பட்டம் பெற்றோர்
மனிதராய்க் கருதி வீணே
அலைந்திடும் பதவி வேட்டை
அடிமைகள் தலைவ ரென்றால்,
நிலைத்திடா அவர்கள் வாழ்வு?
சிந்தினர் சேர்த் தோடு!

பாமரன் வைரி யின்று
பழம்பெரும் ஜஸ்டிஸ் கட்சி,
ஊமையைப் பேச வைக்கும்
உயர்ந்தால் "குணா மானா."
நிலைகள் சிதற டித்துத்
திராவிட நாடும் பெற்றுச்
சேமமாய் வாழ்வோம், இன்றேல்
சிறைக்கூடம், சாவு ஒன்று!

திருச்சி மாநாடு கமிட்டிக் கூட்டத் தீர்மானங்கள்

1945-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13-ந் தேதி வியாழக்கிழமை மாலை 6-30 மணிக்கு திருச்சி டவுன் ஹாலில் 17-வது மாகாண திராவிட கழக (ஜஸ்டிஸ்) மாநாடு, 4-வது மாகாண சுயமரியாதை மாநாடு இவைகளின் வரவேற்புக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்ற போது நிறைவேறிய தீர்மானங்கள்:-

1. தோழர் வி. சின்னதம்பி அவர்கள் முன்மொழிந்து தோழர் இராசையபா அவர்கள் பின்மொழிய 17-வது மாகாண திராவிட கழக (ஜஸ்டிஸ்) மாநாட்டிற்கும் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களே தலைமை வகிக்க வேண்டுமென மன்னார்குடி தோழர் வி. பி. என். பாபுசெட்டியார் ஆதரிக்க ஒரேமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

2. தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் முன்மொழிய தோழர் பி. ஆர். பொன்னுசாமி அவர்கள் பின்மொழிய மணச்சநல்லூர் தோழர் எஸ். இராமநாதன் ஆதரிக்க 4-வது மாகாண சுயமரியாதை மாநாட்டிற்குத் தோழர் டி. சண்முகம் அவர்களைத் தலைவராக ஒரேமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

3. தோழர் இராமசையா முன்மொழிய தோழர் பராங்குசம் பின்மொழிய தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் சுயமரியாதை மாநாட்டு திறப்பாளராக ஒரேமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

4. தோழர் டி. கே. சீனிவாசன் முன்மொழிய மணச்சநல்லூர் தோழர் க. மாணிக்கம் வழிமொழிய தோழர் வலைய கோட்டை ஏ. அர்ச்சுனன் அவர்கள் திராவிட கழக மாநாடு திறப்பாளராக ஒரேமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

5. அண்ணாமலைநகர் தோழர் இரெ. இளவழுதி முன்மொழிய, தோழர் தைலியம் பின்மொழிய, தோழர் இந்திராணி பாலசுப்ரமணியம் அம்மையார் அவர்கள் திராவிடக் கழக மாநாட்டுக் கொடி யேற்றுவோராக ஒரே மனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

6. தோழர் கிரான்பில் முன்மொழிய தோழர் டி. வி. ஜெகநாதன், பின்மொழிய சேலம் தோழர் கனகம்மையார் அவர்கள் சுயமரியாதை மாநாட்டுக் கொடி யேற்றுவோராக ஒரே மனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

7. தோழர் வி. சின்னதம்பி முன்மொழிய, தோழர் சு. நாராயணசாமி பின்மொழிய தோழர் தி. பொ. வேதாசலம் அவர்களை திராவிடக் கழக மாநாட்டு வரவேற்புக் கழகத் தலைவராக ஒரே மனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

8. தோழர் டி. எஸ். முத்து முன்மொழிய, தோழர் டி. எம். வானமாமலை பின்மொழிய, தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் சுயமரியாதை மாநாட்டு வரவேற்புக் கழகத் தலைவராக ஒரே மனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

ரோஜா முத்தையா

தென்னாற்காடு மாவட்ட திராவிடர் கழக 2-வது மாநாடு

1-9-45 சனிக்கிழமை இரவே விருத்தாசலத்திலிருந்து தனியாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கார், பஸ் இவைகளில் தலைவர்கள் திட்டக்குடி வந்து சேர்ந்தார்கள். இரண்டு நாட்கள் முன்னிருந்தே சுமார் ஐயாயிரம், ஆறாயிரம் பேர் உட்காரக்கூடிய மிகப் பெரிய பந்தல் திட்டக்குடி சிவன் கோவிலுக்கெதிரிலுள்ள மைதானத்தில் போடப்பட்டு, இயக்கக் கொடிகளாலும், சீர்திருத்த வாக்கியங்கள் பொறிக்கப்பட்ட அட்டை, படங்களாலும் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஊரெங்கும் தோரணங்களும், வளைவுகளும் அமைக்கப்பட்டிருந்தன.

2-9-45 ஞாயிறு காலை 8½ மணிக்கு தோழர் சக்கரபாணி அவர்களின் இல்லத்திலிருந்து தலைவர்கள் ஊர்வலம் ஆரம்பமாயிற்று. பூமாலைகளால் அலங்கரிக்கப்பெற்ற காரில் தலைவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். வழியில் பல இடங்களில் தலைவர்களுக்கு மாலையிட்டுப் பல தோழர்கள் மரியாதை செய்தனர். திட்டக்குடி திராவிடத் தொண்டர் படையினர் இயக்கக் கொடிகள் தாங்கி வாழ்த்தொலிகள் முழங்கி வந்தனர். திட்டக்குடியில், திராவிடநாட்டுப் பிரிவினை பெற்ற நாள் நடக்கும் திருவிழா போன்று அன்று நடைபெற்றது. முன்னாள் இரவிலிருந்தே வெகு தொலைவிலிருந்து திராவிட மக்கள் குழந்தைகளுட்படக் குடும்பங்களோடு வந்து பந்தலிற் குழுமியிருந்தனர். பந்தலில் ஒலிபெருக்கி அமைக்கப்பட்டிருந்தது. பந்தலுக்கு வெளியிலும் பல நூற்றுக்கணக்கான மக்கள் அமர்ந்து தலைவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டு உணர்ந்தனர்.

திராவிடத் தந்தை பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களையும், தளபதி அண்ணாதுரை அவர்களையும் இடங்களிலிருந்து வந்து குழுமியிருந்த மக்கள் மிக ஆர்வத்தோடு கண்டுகளித்தனர்.

தோழர் கே. அன்பழகன் பி. ஏ., (ஆனர்ஸ்) அவர்கள் திராவிடக் கொடியை ஏற்றிவைத்தார்.

திராவிடநாட்டின் தனிப்பெருந் தலைவர் பெரியார் அவர்கள் மாநாட்டைத் திறந்துவைத்தார்கள். தோழர் சு. இராமலிங்கம் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். தோழர் சக்கரபாணி முன்மொழிய, தோழர் ஆக்கூர் இராமசாமி வழிமொழிய திராவிடர் தளபதி சி. என். அண்ணாதுரை எம். ஏ. அவர்கள் மாநாட்டிற்கு தலைமைதாங்கினார்கள். தோழர்கள் எம். எஸ். சுப்ரமணியன், தளபதி அண்ணாதுரை அவர்களுக்கும், சு. இராமலிங்கம் தலைவர் பெரியார் அவர்களுக்கும் வரவேற்பிதழ்கள் வாசித்தளித்தனர்.

தலைவர் முன்னுரைக்குப்பின் "திராவிடர் யார்?" என்பதுபற்றி தோழர்கள் ஏ. பி. சனார்த்தனம் எம். ஏ., புலவர் மன்னன், பண்ருட்டி டி. எ. கரீம் ஆகியோர் அரிய சொற்பொழிவாற்றினர். இத்துடன் இடைவேளை உணவிற்காக மாநாடு கலைந்தது.

பிற்பகல் 4 மணிக்கு மாநாடு மீண்டும் தொடங்கியது. காஞ்சி கலியாணசுந்தரனாரின் திருமகள், பழையகோட்டை பட்டக்காரர், திருவாரூர் ஆறுமுகனார் ஆகியோரின் மறைவு குறித்து அனுதாபத் தீர்மானம் நிறைவேறியபின், திட்டக்குடி ஆரம்பப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக மாற்றவும், திட்டக்குடி-கடலூர் பாதையைச் சீர்படுத்தவும் தென்னாற்காடு ஜில்லா போர்டாரைக் கேட்டுக்கொள்வதாகவும், வைத்திய சாலைகளின் குறைகளைப் போக்கவேண்டுமென சர்க்காரைக் கேட்டுக்கொள்வதாகவும், தோழர் சக்கரபாணி அவர்கள் கொண்டுவந்த தீர்மானங்கள் நிறைவேறின. திராவிடநாட்டுப்பிரிவினை, திராவிடப் போராட்டத்திற்கு ஆதரவு ஆகியவற்றைப்பற்றி தலைவர் கொண்டுவந்த தீர்மானங்களும் நிறைவேறின. இத்துடன் மாநாடு கலைவுற்றதென அறிவிக்கப்பட்டு தளபதி அண்ணாதுரை அவர்கள் தலைமையிலேயே பொதுக்கூட்டம் ஆரம்பமாகியது. சுமார் 2-மணிநேரம் பெரியார் அவர்கள் திராவிடர் நிலையை விளக்கிப் பேசினார்கள், பின்னர் அண்ணாதுரை, மக்களின் பெரும் ஆரவாரத்துக்கிடையே எழுந்து சுமார் 2 மணி நேரம் திராவிடர் கடமை என்பது குறித்து உணர்ச்சி மிக்க சொற்பொழிவாற்றினார்கள். தோழர்கள் கலியாணசுந்தரம், அன்பழகன், சனார்த்தனம், கடிகைமணி டி. வி. நாராயணசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றியதன் பின் தோழர் சக்கரபாணி நன்றிகூறினார். தோழர் ஆ. திராவிடமணி திட்டக்குடி எப்பொழுதுமே ஓர் சுயமரியாதைக் கோட்டையெனக்கூறி மாநாட்டை வெற்றிகரமாக நடத்திக் கொடுக்க தம்மோடு ஒத்துழைத்த திராவிட இளைஞர்களுக்கும், நேர்மையாக நடந்துகொண்ட அரசியல் அதிகாரிகளுக்கும் நன்றிகூறியதன் பின் பொதுக்கூட்டம் இனிது முடிந்தது.

திட்டக்குடியில் இவ்வளவு திரளான மக்கள் எப்பொழுதுமே கூடியதில்லையெனவும், தலைவர்கள் சொற்பொழிவைக் கேட்ட ஒவ்வொருவரும் ஆரியத்தை அழித்தேதீருவோம் எனவும் மக்கள் பேசிக்கொண்டு சென்றனர்.

(ஒ. கி.)

திருவையாறு கல்லூரியில்

"தஞ்சை மராட்டிய மன்னரால் விடப்பட்ட சத்திரத்தில் நடந்துவரும் திருவையாறு அரசர் கல்லூரியில் தமிழும் வடமொழியுங் கற்பிக்கப்படுகிறது. அங்கே சில ஆண்டுகட்கு முன்னர் தஞ்சை ஜில்லா போர்டாரால் கலப்பு உணவுத் திட்டம் கொண்டுவரப்பட்டது. இதனால் அக்கிரகாரத்தின் அறநல் அதிகாரகளே, பார்ப்பன மாணவர்களுக்குத் தனியாக அரிசி, பருப்பு முதலிய சாமான்களை வழங்கி வருகின்றனர்.

ஆனால் இப்பொழுது அங்கே பார்ப்பன மாணவர் தொகை குறைந்துவருவதாயும், நாளடைவில் வடமொழிப் பயிற்சியே மறைந்துவிடுமென்றும், கல்லூரியின் கதவு அடைபட்டுவிடுமென்றும், உடனே கலப்புணவுத் திட்டத்தை ரத்து செய்யவேண்டுமென்றும் அங்குள்ள பார்ப்பனர் மீண்டும் ஓலமிடுகின்றனர். இச்செய்தியைத் தேசியத் தாட்களும் தீட்டி வருகின்றன. இந்த அறைகூவலுக்கெல்லாம் அன்பர் நாடிமுத்து அஞ்சமாட்டாரென்று நம்புகிறோம்" என்று அங்கிருந்து ஒரு மாணவத் தோழர் வரைகின்றார்.

பொன்மலையில் சீர்திருத்தத் திருமணம்

13-9-45 காலை 12 மணிக்குப் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் சீரிய தலைமையில் தோழர்கள் கடேசன்-மருதாம்பாள் அவர்கள் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது.

இத் திருமணத்தைக் குறித்து தோழர்கள் பொன்னுசாமி, பாலகுரு, பெருமாள், மாணிக்கம், கிருஷ்ணசாமி, பார்வதி அம்மையார், தங்கராஜ் முதலியோர்கள் பேசிய பின் பெரியார் அவர்கள் சுமார் 2 மணி நேரம் வரை மாறுதல் திருமணத்தின் அவசியத்தைப் பற்றியும், பெண் மக்கள் இருக்கவேண்டிய முறையையும், மூடப்பழக்க வழக்கத்தின் கேடுகளையும் விளக்கிப் பேசினார்கள்.

மணமக்கட்குப் பல சங்கங்களின் சார்பில் மாலைகளும், இயக்கப் புத்தகங்களும், வாழ்த்துப் பத்திரங்களும் அளிக்கப்பெற்றன. தோழர் பொன்னுசாமி அவர்கள் நன்றிகூறலுடன் கூட்டம் பகல் 2-30 மணிக்கு முடிவுற்றது. வந்திருந்தோர் அனைவருக்கும் சிறந்த விருந்தளிக்கப்பட்டது.

நன்றி

தென்னாற்காடு மாவட்ட திராவிடர் கழக 2-வது மாநாடு 2-9-45 ஞாயிறன்று திட்டக்குடியில் நடைபெற்ற போது பொருளுதவியும், உடலுழைப்பும் நல்கிய தோழர்கள் யாவருக்கும் வரவேற்புக் கழகத்தார் தம் நன்றி தெரிவித்துக் கொள்கின்றனர்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

வேவல் பிரபு என்ன பேசினார்?

(திராவிடன் எழுதுவது)

"வேவல் பிரபு என்ன பேசினார்?" என்று பலர் நம்மைக் கேட்கிறார்கள். அவர் என்ன பேசினால் நமக்கு என்ன? அவர் நமக்காகப் பேசுகிறாரா? அதுதான் இல்லையே! நம்மைப் பற்றி அவருக்கு என்ன தெரியும்? எப்படித் தெரிய முடியும்? நாம் இந்தியர்கள் அல்ல—இந்துக்கள் அல்ல; திராவிடத்தவர், திராவிடர் என்கின்றோம். இதை நம்மவர்களில் எத்தனை பேர் ஒப்புக் கொள்ளுகிறார்கள் என்றால் அதைச் சொல்லவே வெட்கப்படவேண்டி இருக்கும்போது நம்மைப் பற்றி வெள்ளையரோ வேவலோ எப்படிப் பேசமுடியும்?

தமிழனின் தன்மானமும் தமிழன் பிறப்பின் பரிசுத்தமும் தன்னைப் பார்ப்பானின் வைப்பாட்டி மகன், பார்ப்பானின் அடிமை என்ற அர்த்தமும் உள்ள சூத்திரன் என்பதை நான்காம் இடமாய்க் கொண்ட இந்து நான்தான் என்று சொல்லிக்கொண்டும், (தென்) இந்தியன் என்று சொல்லிக் கொண்டும் இருக்கும்போது வேவல் துரை இந்தியனுக்கும், இந்துவுக்கும் (ஜாதி இந்துவுக்கும், ஜாதிகெட்ட இந்துவுக்கும்) தான் பேசுவாரே ஒழிய திராவிடனுக்கு (தமிழனுக்கு) ஆக என் பேசுவார்? எப்படிப் பேசுவார்? அவருக்கு எப்படித் தெரியும்? என்று கேட்கிறேன்.

தமிழனுக்குத் தன்மானம் வந்து, தன் பிறப்பில் விளக்கம், நம்பிக்கை, பிடிவாதம் ஏற்பட்டு அதற்குஆக உயிர்விடும் உணர்ச்சி வந்தாலொழிய வேவல் நம்மை திரும்பிப்பார்க்கமாட்டார் என்பது நிச்சயம். நாடு அற்ற, பிறப்பு அற்ற, இதனால் மானம் அற்ற, கூட்டத்திற்கு வேவல் பேசவேண்டுமென்று எதிர்பார்ப்பது மடமையோடு மடமை கூடி பிள்ளை பெற்ற, பரிசுத்த கலப்பற்ற, மடமையேயாகும்.

ஆதலால்தான் திராவிடர் கழகம் பட்டம், பதவி, சுயநலம், தனிப்பெருமைக்குப் பயன்படும் தேர்தல், கட்டுப்பாடான தோல்வி அவமானம் ஆகியவைகளை லட்சியமாய்க் கொள்ளாமல் தாங்கள் ஒரு கூட்டம் இருப்பது வெள்ளையனுக்கும், வேவலுக்கும், ஏன்? உலகத்துக்கும் தெரியும்படியும் நம்மையும் மனிதர்கள், மானமுள்ளவர்கள் என்று கருதும்படியாகவும் செய்வதற்கு ஆகவே வேலை செய்கிறது.

இந்த வேலைக்கு வேவல் என் சொன்னார் என்பது சிறிதும் சம்பந்தப்பட்டதல்ல. ஆதலால் அதுபற்றிய கவலையை ஆரியர்களுக்கும், அவர்களது அடிமைகளுக்கும், மானமற்ற சுயநலமிகளுக்கும், எதையும் விற்றுப் பிழைக்கும் ஈனக் கூலிகளுக்கும் விட்டுவிட்டு நம் வேலையைப் பார்ப்போம் என்கின்றேன்.

நமக்கு வேட்டையாடும் வேலை இப்போது, இந்த நெருக்கடியில் வேண்டாம்! வேண்டவே வேண்டாம். நம்மை எவனும் வேட்டை ஆடாமல் பார்த்துக் கொண்டால் அதுவே போதும்; இப்போது போதும், ஆதலால்தான் திராவிட உரிமை கொண்டாடும் மக்கள், இளைஞர் யாவரும் வேவல் என்ன சொன்னார் என்பது பற்றிச் சிந்திக்க வேண்டாம் என்கிறேன்.

மாவட்டந்தோறும் மாநாட்டு விளம்பரம்

திருச்சி மாநாடுகள் சம்பந்தமான சுவரொட்டி விளம்பரக் காகிதங்களும், துண்டு விளம்பரத் தாட்களும் மாநாட்டு வரவேற்புக் கழகத்தாரிடமிருந்து ஒவ்வொரு திராவிடர் கழகத்திற்கும், சுயமரியாதைச் சங்கங்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன.

சுவரொட்டிக் காகிதங்களை ஊர்களின் முக்கியமான இடங்களில் ஒட்டியும், துண்டுப் பிரசுரங்களை நேரில் மக்களிடம் வழங்கியும், மெகாபோன் என்ற குழாய் மூலம் பேசியும், திருச்சி மாநாடுகளை நன்கு விளம்பரம் செய்து ஏராளமான மக்களைச் சேர்த்து வருமாறு ஆங்காங்குள்ள திராவிடர்-சுயமரியாதை இயக்கத் தோழர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

திருச்சி மாநாட்டு டிக்கட்டுகள்

திருச்சியில் தென்னூர் பழனிச்சாமி பிள்ளை பங்களாவில் உள்ள மாநாட்டு அலுவல் ஆபீஸிலும், தோழர் தி. பொ. வேதாசலம் அவர்கள் இல்லத்திலும் மாநாட்டு டிக்கட்டுகள் கிடைக்கும். இயக்கத் தோழர்கள் முன்னதாகவே டிக்கட்டுகள் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம். வெளியூர் அன்பர்கள் திருச்சி முகவரிக்குப் பணம் அனுப்பி டிக்கட்டுகளைப் பதிவு செய்து கொள்வது நல்லது. கடைசியில் டிக்கட்டுகள் கிடைப்பது கஷ்டமாயிருக்கலாம்.

சுயமரியாதை, திராவிடக் கழகங்களின் கொள்கைகளை ஒப்புக்கொண்ட அங்கத்தினர்கள் தான் மாநாட்டுப் பிரதிநிதிகளாகி மாநாட்டு நடவடிக்கைகளில் கலந்துகொள்ள முடியும்.

இங்ஙனம்,
மாநாட்டு வரவேற்புக்கமிட்டியார்.

மாநாட்டில் கடைகள்

29, 30-9-45 தேதிகளில் திருச்சியில் நடைபெறும் மாநாடுகளின் பந்தலுக்கு வெளியே அமைக்கப்படும் கடைகளில் இயக்க சம்பந்தமான வெளியீடுகள், படங்கள், பைகள், துண்டுகள் முதலியன விற்பனைசெய்ய தேவையானவர்கள் ஏற்பாடு செய்துகொள்ளலாம்.

பெரியார் முகவரி

பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் 18-9-45 முதல் மாநாடுகள் முடியும்வரை திருச்சியில் இருப்பதால் கீழ்கண்ட முகவரிக்கு எழுதும்படி கோரப்படுகிறது.

C/o தி. பொ. வேதாசலம்,
வக்கீல், தென்னூர், திருச்சி.

தஞ்சை திராவிடப் படை

தோழர் கே. ஆளவந்தார் தலைவராகவும், தோழர்கள் டி. ஏ. பாலகிருஷ்ணன், டி. வி. ஜெகநாதன், எல். ஆர். சுப்பண்ணா ஆகியோர் செயலாளர்களாகவும், மற்றும் 40 பேர் உறுப்பினராகவுங்கொண்ட தஞ்சை திராவிடப் படை 26-9-45 மாலை தஞ்சை திராவிட வாலிபர் கழகத்திலிருந்து புறப்பட்டு பெரிய ஆஸ்பத்திரிக்கெதிரிலுள்ள செல்வம் மைதானத்தில் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு மறுநாள் காலை 5 மணிக்குக் கிளம்பி திருவையாறு, திருக்காட்டுப்பள்ளி, கல்லணை வழியாக வந்து திருச்சி மாநாட்டில் கலந்துகொள்ளும்.

* *

வடஆர்க்காடு ஜில்லா தோல் பதனிடும் தொழிலாளர் மாநாடு ராணிப்பேட்டை தியேட்டரில் 23-9-45 மாலை 2 மணிக்கு நடைபெறும். தோழர்கள் ராவ்பகதூர் ஆல்பர்ட் ஜேசுதாசன், ஆர். ராஜகோபால் நாயுடு, திரு. வி. க. ஆகியோர் கலந்துகொள்வர்.

* *

வள்ளுவ இன சீர்திருத்த வாலிபர் சங்க அபிமானிகள் கூட்டம் ஒன்று 23-9-45 பகல் 11 மணிக்கு குற்றாலம் கைலாயசாமி மடத்தில் கூடி நிர்வாகிகளைத் தெரிந்தெடுக்கும்.

புறப்படு தோழா!

(மு. மீ. சீனிப்பாண்டியன்)

என் அன்பிற்குரிய தோழனே! திருச்சியிலே இம்மாதம் 29, 30 தேதிகளிலே திராவிட மாநாடும், சுயமரியாதை மாநாடும் நடைபெறப் போகின்றனவே! திராவிடனாகிய நீ, சுயமரியாதையுள்ள நீ இச்சமயம் என்னசெய்யப் போகிறாய்? ஏராளமான கஷ்டநஷ்டங்கள், எதிரிகளின் ஏசுதல்கள், 'மார்பிலே பாயும் கூர்த்த கடாக்ஷ'ங்களினிடையிலே, கொண்ட கொள்கை விடாது, அடைந்தே தீருவோம் திராவிடநாட்டை என்று வீராவேசத்துடன் முழங்கிவரும் பெரியாரின் பெருமொழிகள் கேட்டாயா? சுயநலமும், பட்டம், பதவிமோகமும் விடுத்து நடுநிலைமையான மனத்துடன் நேர்வழியில் சிந்தித்துப் பார்த்தாயா? தாழ்ந்துபோன ஒரு சரித்திரப் பிரசித்தி பெற்ற சமுதாயத்தைத் தட்டி எழுப்பித் தலைநிமிரச் செய்து தன்னுணர்வு ஊட்டிவரும் தன்னலமற்ற நம் தனிப்பெருந் தலைவரின் தன்மானத் திட்டங்களைத் தலைமேலேற்று நடாத்துவோம், திடமான மனத்துடனே திருச்சி நோக்கிப் புறப்படு தோழா! ஆயிரக்கணக்கான நம் அருமைத் திராவிடவீரக் காளைவும், அன்பர்களுடன் கூடி அளவளாவவும், திராவிடத் தலைவர், தளபதிகளின் திருவுரை கேட்கவும், நம் எதிர்கால வாழ்வைச் சித்தரிக்கவும், தன்மானம் தழைத்தோங்கி, தனி நாடு பெற்றுத் தன்னாட்சி நிலவவும் தீட்டப்படும் திட்டங்களைச் செவிமடுத்துச் சிந்தித்துச் சீரிய வழியிலே செல்வோம், திராவிடப் படையிலே சேருவோம்! நாட்டு விடுதலையில் நாட்டங்கொண்ட தோழனே! புறப்படு திருச்சி நோக்கி!

கூட்டம் ஒத்திவைப்பு

மாயவரம் கொரநாடு திராவிடர் கழக ஆண்டுவிழா திருச்சி மாநாடுகளுக்குப் பின்னர் ஒத்திவைக்கப்பட்டதாகவும் அதில் தோழர்கள் சி. என். அண்ணாதுரை, காஞ்சி கலியாணசுந்தரம், ஈ.வெ.கி. சம்பத் ஆகியோர் கலந்துகொள்வாரென்றும், தேதி, இடம் பின்னர் தெரிவிக்கப்படும் என்றும் கூ. கழகச் செயலாளர் எழுதுகிறார்.

ஒரு நல்ல செய்தி

இம்மாதம் 29, 30 தேதிகளில் திருச்சி மாநாட்டுப் பந்தலில், "தமிழ் உலகம்" வெளியீடுகளான, தளபதி அண்ணாதுரை அவர்களின் அரிய சொற்பொழிவுப் புத்தகங்கள் விற்பனைக்குக் கிடைக்கும்.

"மாணவர் பதிப்பகம்".

தேவை

திறமை வாய்ந்த கம்பாசிட்டர்கள், மெஷின்மேன்கள், பைண்டர்கள், அப்ரெண்டிஸ்கள் (Apprentices) தேவை. நல்ல வேலைக்காரர்களுக்கு ரூ. 40 சம்பளமும் அவர்களுடைய திறமைக்குத் தக்கவாறு ரூ. 15 முதல் ரூ. 20 வரை அலவன்சும் கிடைக்கும். மூன்றாவது மாதத்தில் அவர்களின் திறமையும், ஒழுக்கமும் திருப்திகரமாயிருந்தால் அவர்களை பெர்மெனெண்ட் ஆட்களாக நியமிக்கப்படும். பிறகு அவர்களின் வேலை, ஒழுக்கம் இவைகளுக்குத் தக்கவாறு பின்னும் சம்பளமோ அலவன்சோ ரூ. 10 வரை சேர்த்துக் கொடுக்கப்படும். III பாரம் படித்த நல்ல அப்ரெண்டிஸ்களுக்கு வேலை பழகும் வரை ரூ. 15 அலவன்சாகக் கொடுக்கப்படும். விண்ணப்பங்கள் அவர்கள் முன்பு வேலை செய்த இடங்கள், தொழில் அனுபவம் முதலியன குறிக்கப்பட்டு போஸ்டு பாக்ஸ் No. 56 கோயமுத்தூருக்கு இம்மாதத்திற்குள் அனுப்பப்பட வேண்டும்.

'குடி அரசு' வெளியீடுகள்

★

திருச்சி மாநாட்டுப் பந்தலில் "குடி அரசு" "பகுத்தறிவு" வெளியீடுகளான 70 தினுசு புத்தகங்கள் விற்பனை செய்யப்படும்.

சிறிது காலமாகக் கைவசமில்லாதிருந்த "இரணியன் அல்லது இணையற்ற வீரன்" (பாரதிதாசன் எழுதியது), "பெண் ஏன் அடிமையானாள்"? (பெரியார் ஈ. வெ. ரா. எழுதியது) ஆகிய இரு நூல்களின் புதுப்பதிப்பும் அங்கே கிடைக்கும்.

இரட்டைமலை மறைவு

இம்மாகாண தாழ்த்தப்பட்ட மக்கள் தலைவராகிய பெரியார் இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் தனது முதிர்ந்த 88வது வயதில் முடிவெய்திவிட்டார் என்ற சேதிகேட்டு வருந்துகிறோம். இவரது முடிவு தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் சமுதாயத்திற்கு ஏற்பட்ட பெரும் நஷ்டமேயாகும்.

சென்னையில் மாநாட்டு டிக்கட்டுகள்

சென்னைத் தோழர்களில் திருச்சி மாநாடு டிக்கட்டுகளை இன்னும் வாங்காதிருப்போர் உடனே கீழ்க்கண்ட இடங்களில் பெற்றுக்கொள்ளவும்.

(1) பாலுஸ்டோர், மைலூர் கபே எதிரில், வைசியாபஜார் ரோட், (2) சி. ரங்கராஜ், 41, கூக்ஸ் ரோட், ஸ்ட்டேரி பெரம்பூர், (3) மகாதேவன், சீயூஸ் மார்ட், சூளைமாநகர், ரங்கசாலை, (4) என். எம். சுப்ரமணியம், வைசக்கின் ஷாப், நாராயண நாயக்கன் தெரு, வண்ணை, (5) ராமசாமி, 7, கிருஷ்ணப் பசெட்டித் தெரு சிந்தாதரிப்பேட்டை.

வாசகர்களுக்கு

திருச்சி மாநாட்டு நடவடிக்கைகளையும், சொற்பொழிவுகளையும் வெளியிட விரும்புவதால் அடுத்த வாரம் அதாவது 29.9.45-ந் தேதி வெளிவரவேண்டிய 'குடி அரசு', 'ஜஸ்டிசைட்' பத்திரிகைகள் மூன்றுநாள் தாமதமாக வெளியாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மானேஜர்.

விரைவில் வெளிவருகிறது!

தமிழ் மொழி நூலில் புதுமை
காதற் கடிதங்கள் (வசனம்) 0–12–0
காதற் கணைகள் (கவிதை) 0– 8–0
(தபால் செலவு வேறு)

முன்பணம் அனுப்பிப் பதிப்பித்துக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு 100-க்கு 15 கமிஷன்.

பி வி. இராமசாமி,
26, சாமிப்பண்டாரம் தெரு,
சிந்தாதரிப்பேட்டை, சென்னை.

சி. ஆர். ஆச்சாரியார்

(ஒரு ஜேர்சியன் எழுதுவது)

தோழர் சி. ராஜகோபாலாச்சாரியார் அவர்களை ஒழிக்க, தமிழ்நாடு காங்கரசி லிருந்து விலக்க பலர் முயற்சிக்கிறார்கள். இந்த முயற்சிக்கு பட்டேல், பண்டிதர், பிரசாத், பந்த், முதலிய வடநாட்டுத் தலைவர் ஆதரவுகளும் உள்ளூர இருக்கலாம்.

என்றாலும் அவரை விலக்குவதோ ஒழிப்பதோ அவ்வளவு லேசான காரியம் என்று நமக்குத் தோன்றவில்லை.

ஆச்சாரியாரிடம் இருக்கும் குறைகள் இரண்டாகும். ஒன்று அவரின் புத்தி கூர்மை, மற்றொன்று அவரது தியாகம் (தன்னல மறுப்பு).

புத்தி அதிகமுடையவனும், பணம் அதிகமுடையவனும் காரணமில்லாமலே பலருக்கு எதிரியாவது இயற்கை. இதற்குப் பொறாமைதான் காரணம். ஆனால் முடிவில் புத்தியும், பணமுந்தான் 100-க்கு 90-க்கு மேல் வெற்றி பெறுவதும் இயற்கையாகும்.

தவிர, தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் ஆச்சாரியாரை விட்டுக்கொடுக்க சம்மதிக்கமாட்டார்கள்; தமிழ்நாட்டுத் தமிழர்களும் கட்டுப்பாடாக இருந்து ஆச்சாரியாரை விலக்க சேரவும்மாட்டார்கள்.

காரண காரியம் எப்படி இருந்தாலும் ஆச்சாரியாரைக் காங்கரசிலிருந்து விலக்க முடிந்தால் தமிழர்களுக்கு ஒரு அளவாவது நல்லதுதான். தமிழனுக்கு அவ்வளவு கட்டுப்பாடும், பிடிவாத புத்தியும் இருந்தால் அவன் காங்கரசுக்குப் போக வேண்டிய அவசியமே இருந்திருக்காது என்போம்.

"மனிதனிடம் உண்மையான நல்லொழுக்கம் இருந்தால் அவன் நேரே மோட்சத்திற்குப் போகலாம், கடவுள் தயவோ வழிகாட்டி தயவோ தேவை இல்லை" என்று பெரியார் ஒரு காலத்தில் சொன்னது போல் தமிழனுக்கு கட்டுப்பாடு இருந்தால் காங்கரசில் சேர்ந்து ராஜாஜியை ஒழித்து பிரகாசத்தை அந்த இடத்தில் வைத்து அதன் மூலமாகத் தானா வாழவேண்டும்? முடிந்தால் நல்லதுதான், ஆனால் முடியாது.

புத்திக்கும் தியாகத்துக்கும் பயனில்லாமல் போகுமானால் ஆச்சாரியார் ஒழிக்கப்படலாம்.

ஈரோடு ஏஜண்டு

ஈரோட்டில் மது 'குடி அரசு', 'ஜஸ்டிசைட்' பத்திரிக்கைகளின் ஏஜண்டாக 142, கச்சேரி வீதி, செலக்ட் புக் ஸ்டால் காரரை நியமித்திருக்கிறோம்.

மானேஜர்.

காந்தியாரின் வருணாச்சிரம தர்மக் குழப்பம்

காந்தியார் வருணாச்சிரமதர்மம்பற்றிக் கூறுகையில் "வருணாச்சிரமம்பற்றிய எனது கருத்து எப்போதும் இருந்தது போலவே இப்போதும் இருந்து வருகிறது" என்று கூறிவிட்டு பிறகு ஏதேதோ பேசிக் குழப்புகிறார்.

வர்ணாச்சிரம முறை மிக்க உயர்ந்த தத்துவமென்றும் அது இப்போது கெட்டுப்போய் விட்டதென்றும் கவலைப்படுகிறார். அதோடு கூடவே "சூத்திரர்களும் தீண்டப்படாத சூத்திரர்களும்" இருக்கும் நிலையைப் பார்த்து பரிதாபப்படுவதாகக் காட்டிக்கொள்ளுகிறார்.

இவை 20-9-45ந்தேதி தினசரிகளான இந்து, மித்திரனில் இருக்கின்றன.

காந்தியார் இந்த சமயத்தில் இதை வெளியிட்டிருப்பதானது வைதீகர்களை திருப்திப்படுத்தி வைதீகத்தால் கீழ்மைப் படுத்தப்பட்டிருக்கும் மக்களை ஏமாற்றச் செய்யப்படும் சூழ்ச்சியே யாகும்.

வர்ணாச்சிரமங்கள் சாஸ்திரங்களின்படி ஏற்பட்டவைகளாகும், காந்தியார் பேசுவது கீதையின்படியாகும். கீதையில் உள்ளதும் காந்தியார் வியாக்கியானப்படி அல்ல என்போம். கீதையில் வர்ணத்தின் படி பிறவி பிரித்து, பிரிவினைப்படி தர்மமும் (தொழிலும் இடமும்) பிரித்து அதற்கு மாறாக நடந்தால் மீளாத—மன்னிக்க முடியாத நரகம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இது காந்தியார் மொழிபெயர்த்த கீதை மொழிபெயர்ப்பிலேயே இருக்கிறது. அன்றியும் கீதை, பாரதம் என்ற இதிகாசத்தில் உள்ள ஒரு பாகமாகும்.

காந்தியார் பாரத இதிகாசத்தைக் காட்டி மக்களை ஏய்க்கப் பார்த்தால் நாளைக்கு ஒரு காந்தியார் தோன்றி இராமாயண இதிகாசத்தில் சம்பூகன் வதை பாகத்தை, அதாவது சூத்திரன் முதல் மூன்று வர்ணத்தாருக்கு அடிமையாய் இருந்து அவர்களுக்கே பக்தி, தொண்டு செய்வதன் மூலம் மோட்சமடையாமல் நேரே கடவுளைப் பிரார்த்தித்ததற்கு ஆக கொலை செய்யப்பட்ட சம்பூகன் விஷயமாய் பகவான் ராமன் நடந்துகொண்ட நடவடிக்கைதான் சரி என்று சொன்னால் அதை யார், எதைக்கொண்டு, எப்படி மறுக்க முடியும்?

ஆகையால் காந்தியாரின் வருணாச்சிரமக் கருத்து எப்படியாவது சாஸ்திரங்களுக்குத் தப்பு அர்த்தம் செய்து மக்களை ஏமாற்றி வருண முறைகளைக் காப்பாற்றிப் பார்ப்பனருக்கு அடிமைப் படுத்திக் கொடுத்துத் தான் ஒரு கடவுளாக ஆக வேண்டுமென்பது தவிர வேறொன்றுமல்ல.

பெரியார் 67-வது பிறந்தின விழா

சென்னை, செப். 17:

நேற்று மாலை தண்டையார்பேட்டை திராவிடர் கழகத்தின் ஆதரவில், தோழர் குப்புசாமி தலைமையில் பெரியார் 67-வது பிறந்த தின விழா கொண்டாடப்பட்டது. அதுபோது தோழர்கள் எஸ். ஆர். சாண்டோ, ராஜேந்திரன், க. அன்பழகன், என். ஜீவரத்தினம், என். வி. நடராஜன், சொற்பொழிவாற்றினார்கள்.

(ந. வி.)

மே. த. கவர்னரின்
யுத்த நிதி

பிரிட்டிஷ் ஜனநாயக நாடுகள்
(காமன் வெல்த்)
வெற்றியடைய உதவியதற்காக
பெருமையடைகிறது.

★

ஆனால்
துருப்புகளின் சௌகரியங்களுக்கு
இன்னும் பொருளுதவி மிக மிகத் தேவையாகிறது.

ரோஜா முத்தையா

குடி அரசு

1945-ஆம் செப்டம்பர் 22-உ

தேர்தலில் காங்கரசல்லாதார் நிலை

காங்கரசானது சட்டசபை தேர்தலுக்கு நிற்பதற்கு முடிவுசெய்துகொண்டு தேர்தல் யுத்த முஸ்தீப்பு தயார்செய்துகொண்டு வருகிறது.

காங்கரசின் யுத்த முரசும் சங்கநாதமும் காது செவிடுபடும்படியாக ஒலிக்கின்றன. "வயிறுள்ள சீமாட்டி வரிமுடிவாள்" என்ற பழமொழிக்கு இணங்க காங்கரசுக்கு, தேர்தலுக்கு வேண்டிய சகல சவுகரியங்களும் இருப்பதால் அது தேர்தல் யுத்தத்திற்கு முனைந்ததில் அதிசயமொன்றுமில்லை. மற்றும் "கொண்டவன் கைவசமிருந்தால் மனைவி குப்பையேறி வம்புக்குப் போவாள்" என்னும் பழமொழிக்கு ஏற்ப சர்க்கார் இப்போது காங்கரசுக்குப் பூரண ஆதரவாயிருப்பதாகக் காட்டப்பட்டு வருவதால் காங்கரசு யாரையும் லட்சியம் செய்யாமல் யாருடனும் வம்பு வழக்குக்குப் போகத் துணிந்து சல்லடம் கட்டுகிறது.

இந்தச் சமயத்தில் காங்கரசை யார்தான் எதிர்த்து என்ன செய்ய முடியும்? என்பது நமக்கு விளங்கவில்லை. அதற்குள் பணம், பத்திரிகை, "தியாக முத்திரை" கட்டுப்பாடு, சர்க்கார் உளவு இருக்கிறது. உண்மையை பேசவேண்டுமானால் இன்று இந்தியாவில் காங்கரசை எதிர்த்து வெற்றிபெற நல்ல தகுதி உள்ள ஸ்தாபனம் எதுவும் இல்லை என்றே சொல்லலாம்; சர்க்காருக்கும் இஷ்டமில்லை எனலாம்.

முஸ்லிம்லீக் காங்கரசுக்கு எதிரான நல்ல பலமுடையது என்பதில் ஆட்சேபனை இல்லை. ஆனால் அது "மைனாரிட்டிகளின் ஸ்தாபனம்" "இந்துக்கள் அல்லாதாரின் ஸ்தாபனம்" என்பதாக கருதப்பட நேரிட்டுவிட்டதாலும், அதுவும் சில மாகாணத்தைப் பொருத்ததும் முஸ்லிம் சமுதாயத்தை மாத்திரம் பொருத்ததுமாகும் என்பதாகவும் ஆகிவிட்டதால் அது காங்கரசின் ஒரு பாகத்திற்கு மாத்திரம் எதிர்ப்பாக ஆகிவிட்டது என்றாலும் அதுவே காங்கரஸ் பலத்துக்கும் காரணமாகும். முஸ்லிம் ஸ்தாபனம் வெற்றி பெறுவதாக வைத்துக் கொண்டாலும் அது கேட்பதைக் கொடுக்க காங்கரஸ் ஒப்புக் கொண்டுவிட்டால் மற்றவர்களுக்கு முஸ்லிம் லீக் எதிர்ப்பின் கூட்டுறவுக்கு இடமில்லாமல் பயன்படாமல் போய்விடலாம்.

அன்றியும் இன்றைய நிலையில் முஸ்லிம் லீக் காங்கரசுடன் போட்டிபோடவேண்டிய அவசியமும் இல்லை, போட்டிபோட இடமும் இல்லை. ஏனெனில் முஸ்லிம் லீக் தனித்தொகுதிபெற்ற ஸ்தாபனமாகும். அது முஸ்லிம்களைத் தவிர மற்றவர்கள் இடம் தேர்தலுக்கு வரப்போவதில்லை. ஆதலால் லீக் எதிர்ப்பு காங்கரசின் வெற்றியைத் தடைசெய்ய முடியாது என்பதோடு உதவி செய்ததாகவும் ஆகலாம். காங்கரஸ் வேண்டுமானால் முஸ்லிம்களுக்குள் பிளவை உண்டாக்கி சிறிது தொல்லை கொடுக்கலாம். அது எப்படியானாலும் காங்கரஸ் வெற்றியில் அது குறுக்கிட முடியாததாகும்.

காங்கரசுக்கு எதிர்ப்பாக இந்தியா முழுவதிலும் இந்து மகா சபை இருப்பதாக இந்து மகா சபை காட்டிக்கொள்ளுகிறது. அது வேஷம்தானே ஒழிய உண்மையில் அடிப்படையில் அப்படித்தான் என்று சொல்ல போதிய ஆதாரமில்லை. இந்து மகாசபை காங்கரசுக்கு ஒரு பாதுகாப்பாகும். கம்யூனிஸ்ட்டுகள் என்பவர்கள் காங்கரசில் சரணாகதி ஆனவர்கள். உள் இரகசியத்தில் காங்கரசுக்கும், கம்யூனிஸ்ட்டுக்கும் உள்ள கூட்டுறவு சம்பந்தம் எப்படியிருந்தாலும் வெளியில் காங்கரசார் கம்யூனிஸ்டுகளைக் கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளுவதுபோலும் கம்யூனிஸ்ட்டார் காங்கரசைவிட்டு விலகிவிட்டால் வாழமுடியாதவர்கள் போலவும் நாடகம் காணப்படுவதால் தேர்தலில் கம்யூனிஸ்ட்டுகள் நின்றபோதிலும் அவர்களது எதிர்ப்பு காங்கரசை எப்படிப் பாதிக்க முடியும் என்பது விளங்கவில்லை.

பிறகு ராய் கட்சி என்று ஒன்று இருப்பதாகப் படாடோபம் செய்யப்பட்டு வருகிறது. இதனால் காங்கரசுக்கு எப்படித் தேர்தலில் பாதகம் விளைவிக்க முடியும்? இதன் பலம், இதன் தன்மை, இதில் உள்ள ஆட்கள், இதற்குள்ள பொருளாதார வசதி ஆகியவைகளைச் சரிவரக் கவனித்தவர்கள் இக்கட்சி அபேட்சகர்கள் தேர்தலுக்கு டிபாசிட் கட்டின பணம் வாபீசு பெறுவார்களா என்பதிலேயே சந்தேகம் கொள்ள வேண்டியவர்களாவார்கள். சீக்கியர்கள் என்பவர்கள் தனிப்பட்ட எல்லைக்குள் இருப்பவர்கள் ஆவார்கள்.

மற்றபடி மீதி இருப்பவர்கள் ஜஸ்டிஸ்கட்சிக்காரர்கள் என்பவர்கள். இவர்களும் ஒரு குறிப்பிட்ட (இந்தியாவின் பத்தில் ஒரு) பாகத்தில் இருப்பவர்கள். இவர்கள் நாட்டு எல்லையை வகுத்துக் கொண்டாலும் ஒரே கட்டாய் இருப்பவர்களாக இல்லாமல் இன, வகுப்பு அளவோடு எடுத்துக் கொண்டாலும் ஒரு கட்டுப்பாட்டுடன் இல்லாமல் இருந்து வருபவர்களாவார்கள்.

உதாரணமாக சென்னை மாகாணம் முழுமையையும் எடுத்துக் கொண்டு இங்குள்ள ஜஸ்டிஸ் கட்சி பாத்தியம் கொண்டாடுகிற பார்ப்பனரல்லாத மக்கள் யாவரையும் பார்ப்பனரல்லாதார் என்றோ திராவிடர் என்றோ எடுத்துக்கொண்டாலும் அதே மக்கள் தான் காங்கரசிலும், ராய்கட்சி என்பதிலும், இந்துமகாசபை என்பதிலும், ஜஸ்டிஸ்கட்சி என்பதிலும் இருந்துவருபவர்களாகும். அதாவது நான்கு பாகமாகப் பிரிந்திருக்கிறார்கள். ஜஸ்டிஸ்கட்சி என்பதிலும் அதிலுள்ளவர்கள் மூன்று கட்சியாகப் பிரிந்திருப்பதாகக் கருதும்படி இருந்துவருகிறார்கள்.

அதாவது, பட்டம், பதவி, தேர்தல், சர்க்கார் பிச்சை ஆகியவைகளில் நம்பிக்கையும் கவலையும் கொண்ட பார்ப்பனரல்லாதார் என்பவர்கள் ஒரு கட்சியாகவும்,

பட்டம், பதவி, தேர்தல்கள் முதலியவைகளைப்பற்றிக் கவலையில்லாமல், தற்காலம் அவைகளை முக்கிய குறிக்கோளாகக் கொள்ளாமல் வெறுத்து, சமுதாயத்தை ஒரு கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவந்து சரி

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

யான, மக்கள் மதிக்கும்படியான எதிர்ப்புஸ்தாபனமாக ஆக்கவேண்டும் என்று கருதி தென்இந்தியர் என்கின்ற பெயருக்குப் பதில் திராவிடர் என்றபெயரால் ஜஸ்டிஸ் கட்சியைத் திருத்தித்தொண்டாற்றி வருபவர் மற்றொரு கட்சியாகவும்,

மேற்கண்ட இரண்டிலும் சேராமல், எதுவலுக்கிறது என்று பார்த்துக்கொண்டு சமயசஞ்சிகைகளாய் இருக்கும் கூட்டத்தினர் மூன்றாவது கட்சியாகவும் இருந்துவருகிறார்கள்.

இப்படியாக இந்த மாகாண மக்கள் பிரிந்திருக்கும்போது இந்த மாகாணத்தில் காங்கரசானது தேர்தலில் எப்படி பாதிக்கப்படக் கூடும்? என்பதும் யோசித்தால் விளங்காமல்போகாது. இனி ஷெடியூல்ட் வகுப்பு என்னும் தாழ்த்தப் பட்டமக்கள் என்பவர்களின் கட்சி என்பது. இதற்குத் தலைவர்கள் என்பவர்கள் உண்டு. மற்றபடி வேறு விதமான பொருளாதாரமோ, கட்டுப்பாடான ஸ்தாபனவலுவோ, தேர்தல் சுதந்தரமோ, தேர்தலில் காங்கரசுக்கு தொல்லை கொடுக்கக்கூடிய அளவுக்கு இருப்பதாகச் சொல்ல முடியவில்லை. இதற்குச் சர்க்கார் ஆதரவு சிறிது இருக்கிறது என்று சொல்லலாம், அதுவும் சர்க்கார் தங்கள் நலத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளத்தக்க அளவுக்கு ஆதரவு என்று தான் சொல்லலாமே அல்லாமல், இவர்கள் தொகுதிக்குப் புதிதாக ஏதாவது மாறுதல் ஏற்பட்டால் ஒழிய தேர்தலில் 100-க்கு 50 வெற்றி பெறுவதும் இக்கட்சிக்கு மிக்க அதிசயமேயாகும்.

இந்நிலைமையில் தேர்தலில் காங்கரசின் மெஜாரிட்டி வெற்றி எப்படிப் பாதிக்கப்படமுடியும் என்று கேட்கிறோம்.

காங்கரசின் ஆதரவில்லாவிட்டால் இந்த நாட்டில் சர்க்கார் முதல் வேறு எந்தக் காரியமும் நடவாது என்கின்ற தன்மையை சர்க்கார் அதற்கு உண்டாகும்படி செய்து இருக்கிறார்கள்.

அதனாலேயே இன்று காங்கரசைக் கண்டால்

ராஜாக்கள் ஒதுங்கிக்கொள்ளுகிறார்கள்,

ஜமீன்தாரர்கள், பிரபுக்கள் என்பவர்கள் பயந்து நடுங்குகிறார்கள்,

வியாபாரிகளும் விவசாயிகளும் காங்கரசுக்குக் கப்பம் கட்டுகிறார்கள்.

படித்தவர்களும் அதைப் பாக்கியம்பெறத்தக்க படிக்கட்டாகப் போற்றுகிறார்கள்.

பாமர மக்கள் அதை மதமாகக் கருதுகிறார்கள்.

காலிகளால் அது வாழ்க்கைத் துறையின் அட்சயபாத்திரமாகக் கருதப்படுகிறது.

சமயசஞ்சிகைகளுக்கு காங்கரஸ் ஒரு பொக்கிஷமாக இருக்கிறது.

சுயநலமிகளுக்கு பிரைஸ் அடிக்கும்சான்ஸாக அது விளங்குகிறது.

சர்க்காருக்கு ஒரு ஜெனரல் சோல் ஏஜண்டு, அதுவும் நம்பிக்கையான ஏக ஏஜண்டாக இருக்கும் உரிமைபெற்று இருக்கிறது. சர்க்காரும் அதற்குப் பூரண சலுகை கொடுத்துவிட்டார்கள் என்பதான அந்த நிலைமை அடைந்திருக்கிறது.

வேண்டுகோள்

மாநாடு டிக்கட் பெற்றவர்கள் அருள்கூர்ந்து டிக்கட் கட்டணங்களை உடனே அனுப்பிக்கொடுக்க வேண்டுமாய் வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

அவசியம் அனுப்பிக்கொடுக்க எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னையும் செங்கல்பட்டும் கோட்டா விஷயத்தில் இதுவரை ஒன்றும் கவனித்ததாகத் தெரியவில்லை. இது வருந்தத்தக்கதாகும்.

C. N. அண்ணாதுரை,
T. P. வேதாசலம்.

பொதுவாகச் சொல்லவேண்டுமானால் காங்கரசை சர்க்காரிடம் லைசென்சு பெற்ற ஒரு கொள்ளைக் கூட்டம் என்றே சொல்லலாம்.

இப்படிப்பட்ட ஒரு ஸ்தாபனத்தை ஏதோ ஒருவர் இருவர் சேர்ந்துகொண்டு அதுவும் திட்டமானகொள்கையோ ஒன்றுக்கொன்று பொருத்தமான பொது லட்சியமோ, இல்லாமல் கட்சிகளை அமைத்துக்கொண்டு காங்கரசை ஒரு கைபார்க்கிறேன் என்றால் காரியம் நடந்துவிடுமா என்று யோசித்துப்பார்க்கும்படி வேண்டுகிறோம். ஜஸ்டிஸ் கட்சியிடம் இந்து மகா சபைக்கு வெறுப்பும், இந்து மகா சபையிடம் ராய் கட்சிக்கு வெறுப்பும், ராய் கட்சியிடம் கம்யூனிட்டுக்கு வெறுப்புமாய் இருக்கிறது. மற்றும் நாம் தைரியமாய்ச் சொல்லுவோம். என்னவெனில் நம் சர்க்காரார் காங்காரஸ்காரர்களை "நீங்கள் சட்டசபைக்கு நிற்கிறீர்களா?" என்று கேட்டு காங்கரஸ் "ஆகட்டும்" என்று ஒப்புக் கொண்ட பிறகுதான் அவர்களுக்கு ஆகவே அவர்களிடம் பொறுப்பை ஒப்புவிக்கவே சர்க்கார் தேர்தல்களை நடத்தப்போகிறார்கள் என்று சொல்லலாம். காங்கரஸ் தேர்தலுக்கு நிற்க மறுத்திருந்தால் இன்று தேர்தல் வந்திருக்காதென்றுகூட சொல்ல பல ஆதாரங்கள் இருக்கின்றன. அன்றியும் முன்பு பலதடவை நாம் குறிப்பிட்டதுபோல காங்கரசுக்கு மாத்திரமே தகுதியாய் இருக்கும்படி தேர்தல் யந்திரத்தை சர்க்கார் சரிசெய்து வைத்திருக்கிறார்கள்.

நாட்டையும், காங்கரசைத்தவிர மற்றவர்களை ஆதரிக்கமுடியாத நிலைமையில் ஆக்கி வைத்திருக்கிறார்கள்.

இவ்வளவு சௌகரியம் காங்கரசுக்கு இருப்பதால்தான் அது இந்த மாதிரி "காட்டுராஜா அட்டகாசம்" நடத்துகிறது என்னலாம்.

எனவே, இந்த நிலையில் காங்கரசில் இல்லாத மக்கள் என்பவர்கள் கடமை எப்படி இருக்கவேண்டும்? ஆளுக்கொரு கட்சியாகவும் நினைத்தவரெல்லாம் தலைவர்களாகவும், நினைத்ததெல்லாம் கொள்கைகளாகவும், சமயத்துக்கேற்ற காரணமாகவும், ஓட்டர்களைப்பற்றிக் கவலையில்லாமலும் இருக்கிறார்கள் என்னும்படி

திராவிடர் கழகத்திற்கு

(ஜஸ்டிஸ் கட்சிக்கு)

22-9-45 வரையில்

அங்கத்தினர்கள் 33984

சந்தா ரூ. 3374—10—0

ரோஜா முத்தையா

இருந்தால் எப்படிக் காங்கிரசைத் தோற்கடிக்க முடியும்? எப்படிக் காங்கிரசைக் குற்றம்சொல்ல முடியும்? என்று கேட்கிறோம்.

தேர்தல் முடிந்தவுடன் "கூட்டுடையசர்க்கார், காங்கிரஸ் சர்க்கார் என்று ஆகிவிடப்போகிறது. உறுதியேயாகும். அப்போது சர்க்காரை எதிர்ப்பது என்பது லேசான காரியமல்ல என்றுதான் சொல்ல வேண்டி வரும். ஏனெனில் அப்போது பிரிட்டிஷ் சர்க்காரும், காங்கிரஸ் சர்க்காரும் இரண்டும் சேர்ந்து "மன்னார்கட்டிக்கு எச்சிலிலை ஆதரவு, எச்சிலிலைக்கு மன்னார்கட்டி ஆதரவு" என்கின்ற தன்மையில் ஆட்சிபுரியும். உள்ளிருந்து நாம் செய்யும் எதிர்ப்பு அதற்கு அலட்சியப்படுத்தத்தக்கதாக ஆனாலும் ஆகலாம். எப்படியெனில், காங்கிரசல்லாதாருக்குள் கட்டுப்பாடு இருந்தால்தானே அது சரியான எதிர்ப்பாக இருக்க முடியும் என்கிறோம்.

முதலாவது ஒரு விஷயம், காங்கிரசார் சொல்வது மக்களால் உண்மை என்று கருதப்படுவதாக ஆகிவிட்டது.

இப்போது காங்கிரசார் ஓட்டர்களிடம் என்ன பிரசாரம் செய்கிறார்கள் என்றால்,

"ஏ மகாஜனங்களே,

நாங்கள் நல்ல சமயத்தில் (சர்க்கார் சங்கடத்தில் இருந்த சமயத்தில்) சர்க்காரை சுயராஜ்யம் கேட்டோம். அப்போது அவர்கள் கொடுக்கவில்லை. அதற்கு ஆகப் பட்டாளத்துக்கு ஆட்கள் போக வேண்டாம் என்றோம், யுத்த நிதிக்கும் பணம் கொடுக்க வேண்டாம் என்றோம். இந்த ஜஸ்டிஸ் கட்சிப் பாவிகள் நம்மவர்களைச் சண்டைக்கு அனுப்பிப் பலரை சாகவைத்தார்கள். உங்களிடம் உள்ள பணங்களை அதிகாரிகளை விட்டு யுத்தநிதிக்கு என்று பிடுங்கிக்கொள்ளச் செய்தார்கள். அந்தப் பணம் நம்மிடம் இருந்தால் எவ்வளவு காரியம் இப்போது நாம் செய்யலாம்.

"நாங்கள் பிரிட்டிஷாரை வெளியில் போ என்று கிளர்ச்சி செய்து, தண்டவாளம் பெயர்க்கப்பட்டு ரயில் கவிழ்க்கப்படும் போது இந்த ஜஸ்டிஸ் கட்சிப் பாவிகள் காட்டிக் கொடுத்தார்கள் "கம்யூனிஸ்டுகளும் காட்டிக் கொடுத்தார்கள்" இந்தப் பாவிகளுக்கா ஓட்டுப் போடப்போகிறீர்கள்?"

என்று சொல்லுவதோடு,

"நாங்கள் அவ்வளவு தூரம் கிளர்ச்சிகள், நாசவேலைகள் செய்து வெள்ளையனுக்குத் தொல்லை கொடுத்ததால்தானே சண்டை நின்றவுடன் சர்க்கார் எங்களைக் கண்டு பயந்து, எங்களைச் சிறையிலிருந்து கூப்பிட்டுத் தாங்கள் செய்ததை மறந்துவிடும்படி எங்களைக் கேட்டுக்கொண்டு இன்று நாங்கள் சொல்லுகிறபடி நடக்கிறார்கள். எல்லோரையும் விடுதலை செய்யாவிட்டால் நாங்கள் கிளர்ச்சி செய்வோம் என்று சொன்னோம், எல்லோரையும் விடுதலை செய்தார்கள். தூக்கு தண்டனை விதிக்கப்பட்டவர்களை தூக்கக்கூடாது என்று சொன்னோம், தூக்காமல் விட்டார்கள். எங்களிடமிருந்து பிடுங்கிக்கொண்ட சொத்துக்களை கொடுக்கச் சொன்னோம், கொடுத்துவிட்டார்கள்.

நாசவேலைக்கு நாங்கள்தான் காரணம் மற்றவர்களை ஒன்றும் செய்யக்கூடாது என்று சொன்னோம், ஒப்புக்கொண்டு விட்டார்கள்.

பிடித்து வைக்கப்பட்டவர்கள், தண்டிக்கப்பட்டவர்கள் யாவருக்கும் ஓட்டும், சட்டசபைக்கு நிற்க அனுமதியும் இருக்கவேண்டும் என்றோம். அப்படியே ஒப்புக்கொண்டார்கள்.

எனவே, துரோகிகளுக்கா, பட்டாளத்துக்கு ஆள் சேர்த்துக் கொடுத்தவர்களுக்கா, உங்கள் பணங்களைக் கோடி கோடியாய் சர்க்காருக்குப் பிடுங்கிக்கொடுத்தவர்களுக்கா, நல்ல சமயத்தில் காட்டிக்கொடுத்த பாவிகளுக்கா ஓட்டுக் கொடுக்கப்போகிறீர்கள்?"

என்று பிரசாரம் செய்கிறார்கள்.

இதே வார்த்தைகளைத் தான் இன்று கம்யூனிஸ்டுகளை வைகிறார்கள். இது நம்மை மறைமுகமாக வைவதாகும். எனவே நாம் இந்த சர்க்கார் ஆட்சியில் தேர்தலுக்கு நிற்பது வெட்கக்கேடானதாக இருக்காதா? வெட்கம் இல்லாவிட்டாலும் இந்த ஓட்டர்களிடம் ஜெயிக்க முடியுமா? பணம் எங்கே? பத்திரிகை எங்கே? கட்டுப்பாடு எங்கே? சர்க்கார் இஷ்டம் எங்கே? ஜெயித்தாலும் ஏதாவது செய்ய முடியுமா? என்றெல்லாம் பார்த்தால் காங்கிரஸ் வெற்றிக்குச் சந்தேகம் இருக்க முடியுமா என்று யோசிக்க வேண்டுகிறோம்.

சுருக்கமாக ஒன்று சொல்லி இப்போது முடிக்கிறோம். காங்கிரசைத் தோற்கடிக்கவோ, சர்க்காருக்குப் புத்திவரவோ செய்ய வேண்டுமானால் காங்கிரசல்லாதார்— அதாவது முஸ்லிம் லீக், ஷெட்யூல்ட்வகுப்பு ஆகியவை அல்லாதார் யாராவது உண்மையாய் இருப்பார்களானால் அவர்கள் யாவரும் ஒன்றுபடவேண்டும்.

தங்கள் பலத்தை ஒன்றுபடுத்தித் தேர்தலைப் பகிஷ்கரித்து வெளியில் இருந்து எதிர்ப்பு முன்னணி ஏற்படுத்தித் தொல்லை கொடுக்கும் முறையில் எதிர்க்கவேண்டும்.

எதிர்ப்பின் மூலம் காங்கிரசைத் இறைச்செய்வதோடு காங்கிரசின் யோக்கியதையையும், சர்க்காரின் யோக்கியதையையும் உலகம் உணரும்படிச் செய்யவேண்டும்.

சர்க்காரார் நமக்கு ஜனநாயகம் தருவதாய்ச் சொல்லிக்கொண்டு தங்களுக்கு வேண்டியவர்களான, அல்லது தங்களுக்குத் தொல்லைகொடுத்துத் தங்களைக் கீழ்ப்படியச் செய்பவர்களான, சட்டம், நீதி, வாக்குறுதி, நாணயம் மீறி மக்களை மிரட்டி அடக்கிவைக்கச் செய்யும்படியான ஒரு கூட்டத்திற்கு ஆதரவளித்து அவர்கள் வசம் ஆட்சியை ஒப்புவித்துத் தாங்கள் [illegible] அதை எப்படி ஜனநாயகம் என்று சொல்ல முடியும் என்பதை ஜனங்கள் அறியும்படி செய்யவேண்டும். அன்றியும் இந்திய மக்களில் காங்கிரஸ் ஸ்தாபனமல்லாத மற்ற ஸ்தாபனங்கள் தேர்தலில் கலக்கவில்லை என்று சொல்லுவதன்மூலம், சட்டசபை எல்லா மக்களுடைய பிரதிநிதி ஸ்தாபனம் அல்ல என்று சொல்லுவதன் மூலம், நல்லதொரு கிளர்ச்சிசெய்ய வகையும் நியாயமும் செய்துகொள்ள சுலபத்தில் வசதி ஏற்படும். அப்படிக்கில்லாமல் தேர்தலுக்கு நின்று தோற்றுப்போனோமானாலும் மெஜாரிட்டி அடையாமல் போனாலும்கூட காங்கிரசின் ஜனநாயகத்தை ஒப்புக்கொண்டு வெறும் பேச்சு வாதத்தோடு நிற்கத்தான் முடியுமே தவிர இருந்

ரோஜா முத்தையா

தங்கள் செய்ய உரிமைபெற்றவர்களாக மாட்டோம்.

அன்றியும் காங்கரசை எதிர்ப்பவர்கள் தங்களை வெறும் கட்சி பேதம் கொண்டவர்கள் என்று சொல்லிக் கொண்டால் பயன்படாது. கொள்கை பேதம் கொண்டவர்களாக இருக்கவேண்டும். அதுவும் அடிப்படையிலேயே பேதம் வேண்டும். இந்த நிலையில் இன்று காங்கரசுடன் போட்டி போட ஆசைப்படுவதாய் சொல்லிக்கொள்ளும் இந்து மகாசபை, ராய்கட்சி, தோழர்கள் சர் சி. டி. ராஜன், டாக்டர் கிருஷ்ணசாமி, சி. பால சுப்பிரமணியம், கே. சி. சுப்பிரமணியசெட்டியார் ஆகியவர்கள் நிற்பதாய்ச் சொல்லிக்கொள்ளும் பார்ப்பனரல்லாதார் கட்சி என்பனவற்றிற்கும் காங்கரசுக்கும் என்ன வித்தியாசம் கொள்கையில், மதத்தில், சமுதாயத்தில் இருக்கிறது என்று சொல்லிக் கொள்ள முடியும்? என்று கேட்கிறோம்.

எனவே காங்கரசல்லாத மற்ற கட்சியார்கள் தேர்தலுக்கு நிற்பதன் மூலம் தோற்றாலும், ஜெயித்தாலும் இன்றைய நிலையில் காங்கரசுக்குத்தான் பெருமையும் வலிமையுமே தவிர மற்றவர்களுக்கு ஒரு லாபமும் ஏற்படப் போவதில்லை என்பது உறுதி.

வேண்டுமானால் யாராவது தங்கள் சுயநலத்துக்குத் தாங்கள் ஒரு மனிதர் இருப்பதாகக் காட்டிக்கொள்ள இது உதவலாம். இதற்கு ஆக இவ்வளவு பெரிய ஆரோகமா?

அடுத்தவாரம்

திருச்சி மாநாட்டுக்கு இனி ஐந்தாறு நாட்கள்தான் இருக்கின்றன. மாநாட்டுக்குப் பெரிய பந்தல் போடப்படுகிறது. இதுவரை எந்த மாநாட்டுக்கும் போடப்பட்டிருக்காத அளவு, அதாவது 220 அடி அகலம் 220 அடி நீளம் (சரியாக ஒரு ஏகர் விஸ்தீரணத்திற்கு மேலாகவே) ஒரு மாபெரிய பந்தல் போடப்பட்டிருக்கிறது. இது தவிர சமையலுக்கும் சாப்பிடுவதற்கும் கடைகளுக்குமாகப் போடப்படும் பந்தல்கள் ஒருசிறு ஊர் போலவே காணப்படும்படியாக இருக்கின்றன. மின்சார விளக்குகளின் அலங்கரிப்பு ஆகியவைகளின் காட்சி கண்காட்சியாகவே இருக்கும் எனலாம். பாட்டுகள் நாடகங்கள் உள்ளங்களைக் கொள்ளைகொள்ளத் தக்கவைகளாக இருக்கும். தோழர் அண்ணாதுரை திருச்சியிலே இருக்கிறார். பல தோழர்கள் இப்போதே வந்து கூடி ஆளுக்கொரு பொறுப்பு ஏற்று வேலைசெய்தவண்ணமாய் இருக்கிறார்கள். எந்தச் சபையிலும் இதுபோல் நடந்திருக்காத மாதிரி அந்தந்த ஜில்லாக்கள் ஏற்றுக் கொண்ட பங்கு வீதத்தொகை பணமாகவும், செக்காகவும், தந்தி மணியார்டராகவும், போஸ்டல் ஆர்டர் மூலமாகவும் வந்துசேர்ந்தவாறாகவே இருக்கின்றன. சாப்பாடுசெய்துபோட ஒப்புக்கொண்ட கண்ட்ராக்டர்களும் சாமான்கள் கட்டுகளுடன் அடுப்பு மூட்டுவதற்குத் துணிந்துகொண்டிருக்கிறார்கள். பிரதிநிதி முதலிய டிக்கட்டுகள் ரிசர்வ் செய்ய தந்தியும் கடிதங்களும் வந்த மயமாகவே இருக்கின்றன. பெண்களுக்குத் தனி இடம் வேண்டி நூற்றுக் கணக்கான கடிதங்கள் வருகின்றன.

நாள் நெருங்க வில்லையே, மாநாட்டுக்கு இன்னும் 5 நாளா, 4 நாளா என்கின்ற கவலை இளைஞர்களை வாட்டிக்கொண்டிருக்கிறது. தனி ஸ்பெஷல் விடும்படியும், தனி வண்டி ரிசர்வு செய்யும்படியும் ரயில்வே அதிகாரிகளுக்கு ஆங்காங்குள்ளவர்கள் விண்ணப்பம் போட்டு அதன் நகலை மாநாட்டுக் காரியாலயத்திற்கு அனுப்பி மாநாட்டுக் காரியதரிசியையும் சிபார்சு செய்யும்படி பல ஜில்லாக்களில் இருந்து வேண்டுகோள் வந்திருக்கின்றன. மாநாட்டு நடவடிக்கைகளை சினிமா பிலிம் பிடிக்க கடிதப் போக்குவரவு நடக்கிறது. இந்த நிலையில் மாநாடு அதிசயமாகவும் அற்புதமாகவும் அபூர்வக் காட்சியாகவும் இருக்கும் என்பதில் சந்தேகம் ஏது?

இப்படிப்பட்ட மாநாடு கூடி செய்யப்போகும் காரியம் என்ன? என்பது மிக மிக முக்கியமான பிரச்சினையாகும். பெரியார் தலையில் தலைமைப் பதவி விழுந்த பின் சென்னை அய்லண்ட் கிரவுண்ட் மாநாட்டிற்குப் பிறகு என்ன நடந்தது? திருவாரூர் மாநாட்டுக்குப் பிறகு என்ன நடந்தது? சேலம் மாநாட்டிற்குப் பிறகு என்ன நடந்தது? என்பனவற்றை ஒருவர் கூர்ந்து கவனித்துப் பார்த்தால் திருச்சிமாநாட்டிற்குப் பிறகு, அதுவும் ஜஸ்டிஸ் மாநாடும், சுயமரியாதை மாநாடும் இரண்டும் சேர்ந்து நடந்த பிறகு என்ன நடக்கும் என்பது யாவருக்கும் எளிதில் விளங்காமல் போகாது. உண்மையில் திருச்சி மாநாடு தக்கதொரு காரியத்தைச் செய்ய மக்களுக்குக் கட்டளையிடும், ஆர்வத்தை அளிக்கும், ஆற்றலைக் கொடுக்கும், ஆத்திரத்தைமூட்டும் அரிய மாநாடாகவே இருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

எனவே இப்படிப்பட்ட மாநாட்டுக்கு வந்து பங்கு கொள்ளாதவர், கண்டுகளிக்காதவர்கள் பரிதபிக்கத்தக்கவர்களே ஆவார்கள் என்பதோடு, மாநாட்டுக்குச் செல்லாமற் போனதானது மாபெரும் குற்றம் என்று மனநோய் அடைபவர்களாவார்கள் என்றும் சொல்லலாம்.

மாநாட்டுக்கு வந்து என்னசெய்வது என்பதும் ஒரு நல்ல பிரச்சினைதான். வந்து என்ன செய்வது? சொல்லுங்கள் பார்க்கலாம்! நமக்காச்சு—நம் இழிவுகளுக்கும் முறைப்பாடுகளுக்கும் ஆச்சு; நமக்காச்சு—நம்எதிரிகளுக்காச்சு; நமக்காச்சு—நல்ல சமயத்தில் நம்மைக் கைவிட்டுவிட்டு ஓடிப்போன சுயநலக் கோழைத் துரோக வஞ்சகர்களுக்காச்சு என்று வரிந்து கட்டி இவ்வளவு பேரும் நாணித் தலை குனிந்து வெட்கத்தால் வாடும்படியான காரியங்களைச் செய்ய வழிகோல வேண்டும்—வலிமை உண்டாக்கவேண்டும், வரிந்து கட்டவேண்டும். அப்படிக்கில்லாமல் சந்தைபோல், சினிமாபோல், உற்சவங்கள் போல் கூடி தினம் பாத்திற்கு வழிசெய்துகொண்டு கலைவதில் பிரயோஜனமில்லை என்பதோடு, அது வெறும் பித்துக் கொள்ளித்தனமுமாகும்.

ஆகவே வாருங்கள் திருச்சி மாநாட்டுக்கு—நெருப்புப் பொறி பறக்கும் தீர்மானங்களைச் செய்யுங்கள். நாடு நடுங்கும் காரியத்தில் இறங்குங்கள். இதுதான் சமயம்—இதுவேதான் சமயம்! இது போன்ற சமயம் இனி எளிதில் கிட்டாது!!

ரோஜா முத்தையா

பாராட்டுகிறோம்

பெரியவீட்டில் சுயமரியாதைத் திருமணம்

வைசிராய் நிர்வாகசபை சபை மெம்பரான கனம் சர் ஏ. இராமசாமி முதலியார் அவர்கள் சென்ற வாரம் தனது மகன் டாக்டர் கிருஷ்ணசாமிக்கு செய்த திருமணத்தில் பார்ப்பனப் புரோகிதத்தை அறவே ஒழித்து சுயமரியாதைத் திருமணம் செய்யப்பட்டதானது மிகுதியும் பாராட்டத்தக்கதாகும்.

இத்திருமணம் திருப்பதியில் நடந்ததானாலும் சென்னையில் சர் ஏ. லக்ஷ்மணசாமி முதலியார் அவர்கள் மாளிகையில் அலங்காரப் பந்தலில் இசை அரசு தண்டபாணி தேசிகர் இசையமுதம் பொழிய ஒரு பொதுமக்கள் வரவேற்புவிழா நடந்தது.

ஆயிரக்கணக்கான பிரமுகர்கள் நண்பர்கள் வந்து வாழ்த்தி மகிழ்ந்தார்கள். சர் ஏ. ஆர். அவர்கள் இன்று மாபெரும் செல்வச் சீமானாய் இருந்தாலும் மிகுதியும் சுருக்கமாகவே அதிக செலவில்லாமல் மற்றவர்களுக்கு வழிகாட்டத் தகுந்தமாதிரியில் இத்திருமணத்தை நடத்தினார் என்பது மகிழ்ச்சி அடையத்தக்கதாகும்.

இசை அரசு தண்டபாணி தேசிகர் அவர்கள் பொருளும் புகழும் நிறைந்த பாராட்டு உரை மடல் ஒன்று வாசித்தளித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கைத் தோழர்களுக்கு வேண்டுகோள்

பட்டுக்கோட்டை சுயமரியாதைச் சங்கக் கட்டிட நிதி வசூலுக்கு எங்கள் கமிட்டியின் சார்பில் மதுக்கூர் தோழர் வீராச்சாமி அவர்களை அனுப்பி இருக்கிறோம். தங்களுடைய மேலான உதவியைக் கொடுத்து ரசீது பெற்றுக்கொள்ளவும். இலங்கைத் தோழர்களுடைய ஒத்துழைப்பு சங்கக் கட்டிடம் கட்டி முடிக்க மிகவும் இன்றியமையாதது. கட்டிடம் வேலை துரிதமாய் நடந்துகொண்டிருக்கிறது. எல்லாத் தோழர்களுடைய ஒத்துழைப்புத்தான் இனி மேல் தேவை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கே. வி. இராமகிருஷ்ணன்,
தலைவர்.

டி'கால் படம் திறக்கவில்லையா?

கவர்னர் கூற்றுக்கு மறுப்பு

காரைக்கால் சென்றிருந்த பிரஞ்சிந்தியக் கவர்னர் அவர்கள், இம்மாதம் 10-ந் தேதி அங்குள்ள பத்திரிகையாசிரியர்களுக்கும் பேட்டியளித்துக் கூறிய செய்திகளில், "புதுவைத் திராவிடர் கழகத்தார், ஜெனரல் டி'கால் படத்தைத்திறக்க மறுத்ததால் தோழர் ஜின்னா முதல் எந்தத் தலைவர் படத்தையும் திறக்கக்கூடாதென்று தெரிவிக்கப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்திற்கு அந்த உத்தரவு போடப்பட்டதே தவிர அது நிரந்தர உத்தரவல்ல" என்ற செய்தியும், 'தினமணி' 12-ந் தேதி (வெளியூர் 13-ந் தேதி) இதழில் காணப்படுகிறது. இக்கூற்று உண்மைக்கு முற்றிலும் மாறானதாகும்.

ஜெனரல் டி'கால் அவர்களின் படத்தைத் திறக்கக்கூடாதென்ற நோக்கம், எங்கட்குச் சிறிதும் இருந்ததில்லை. அன்றியும், வீழ்ந்து போன பிரான்சின் மானத்தைக் காப்பாற்றிய ஜெனரல் டி'கால் அவர்களைப் போற்றுவது, எங்கள் கடமையுமாகும். அன்று திராவிட கழகத் திறப்புவிழா நிகழ்ச்சியின் குறிப்பிட்டிருந்தபடி டி'கால் படம் திறக்கப்பட்டது. அதைத் திறந்துவைத்தவர், புதுவை வழக்கறிஞர் க. பெருமாள் அவர்களாவர். அல்லாமலும், ஜனாப் ஜின்னா அவர்களின் படத்தைத் திறக்கக்கூடாதென்று எங்களுக்கு யாரும் (போலீசுக்காரர்கள் தவிர) தடை விதிக்கவில்லை. உண்மை இவ்வாறாகக் கனம் கவர்னர் அவர்கள் முற்றிலும் மாறானசெய்தியைப் பத்திரிகையாசிரியர்களுக்குச் சொல்லியிருப்பது கண்டு, நாங்கள் மிகவும் வருந்துகிறோம்.

இதனால், திராவிடர் கழகத்தைப் பற்றி அதன் எதிரிகள், எவ்வளவு ஆவேசத்தையும், பொய்ப் பிரசாரத்தையும் சர்க்காரிடம் உண்டுபண்ணியிருக்கிறார்கள் என்பது நன்கு விளங்கும்.

எஸ். சிவப்பிரகாசம்,
திராவிடர் கழகச் செயலாளர்,
புதுவை.

2-மணமகன் தேவை

சேலம்மாவட்டம் மோகனூர் எம். பி. பெரியசாமி மாஜி எம். எல். ஏ. அவர்களது சகோதரியின் குமாரிகள் முறையே செல்லம்மாள் 1, ஞானம்பாள் என்னும் இருவர்களிருக்கிறார்கள். செல்லம்மாள் ஆரம்பப் பாடசாலை உபாத்தியாயனியாக வேலைபார்த்து வருகிறார். ஞானாம்பாள் 6-வகுப்புவரை வாசித்து இருக்கிறார். சொத்து சுமார் 20000 ரூபாய் பெறுமானமுள்ளது.

மணமகன் நல்ல குணம் போதிய படிப்பு இவைகளைப் பெற்றிருக்கவேண்டும். எந்த ஜாதியாயிருந்தாலும் பரவாயில்லை. திருமணம் சீர்திருத்த முறைப்படி நடைபெறவேண்டும். மணமகன் 2பேருக்கும் முறையே 1000 ரூபாய் சன்மானம் கொடுக்கப்படும். இரு பெண்களில் எதை எதை விரும்புகிறார்கள் என்பதை விபரமாய் கீழிலிருக்கும் இரு விலாசங்களுக்கும் எழுதிக் கேட்டோ நேரில் வந்தோ தெரிந்துகொள்ளவும்.

கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்.

1. எம். பி. பெரியசாமி, எம். எல். ஏ. மோகனூர் நாமக்கல் வட்டம், சேலம் மாவட்டம்.
2. எம். பி. வடிவேல், பூசாரித் தெரு, சிந்தாமணி தெப்பக்குளம் போஸ்டு, திருச்சி.

முகவரி

பட்டுக்கோட்டை தோழர் கே. வி. அழகர்சாமி அவர்களின் தற்கால முகவரி:

கே. வி. அழகர்சாமி,
நல்லப்ப நாயகர் தெரு,
வடக்குமாசி வீதி, மதுரை.

தொண்டர் படை

கல்லாரப்பட்டி சுற்றுவட்டத்திலிருந்து 29, 30 தேதிகளில் திருச்சியில் நடைபெறும் மாநாட்டுக்கு தோழர் எல். வீராசன் அவர்களைத் தொண்டர் படைத் தலைவராகக் கொண்டு ஒரு படை புறப்படும் என்று தெரிகிறது.

நாகப்பட்டினம் சுருட்டுத்தொழிலாளர் சங்கக்கூட்டம் தோழர் ஏ. கே. எம். முகைதீன் மரைக்காயர் தலைமையில் நடந்தது. சுருட்டுத்தொழிலாளர் சம்பள உயர்வு பாதுகாப்பு ஆகியவைபற்றித் தீர்மானிக்கப்பட்டன. இச்சங்கத்திற்குத் தோழர்கள் ஏ. கே. எம். முகைதீன் மரைக்காயர் தலைவர், எஸ். பி. கிருஷ்ணன் செயலாளர், தோழர்கள் டி. பி. ஆறுமுகம், கே. எஸ். நாயுடு, டி. என். ராமச்சந்திரன் முதலியவர்கள்.

ரோஜா முத்தையா

ராசிபுரம் மாநாடு

ராசிபுரம் தாலுக்கா 4-வது சுயமரியாதை மாநாடு பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையின் 9-9-45ல் காலையில் பாலசுப்ரமண்ய தியேட்டரில் நடைபெற்றது. தோழர் அரங்கமணி அம்மையார் கொடியேற்றிவைத்தார்கள். சேலம் தோழர் ஆர். நடேசன் மாநாட்டைத் திறந்து வைத்தார். தோழர் ஜி. பி. சோமசுந்தரம் யாவரையும் வரவேற்றுப் பேசினார். பெரியார் தலைமையுரைக்குப் பின் தோழர்கள் நாச்சிமுத்து-பாவாய் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. தோழர் கே. வி. கே. ராமசாமி நன்றிகூறினார். அன்று மாலை நடைபெற்ற பொதுக் கூட்டத்திலும் பெரியார் ஈ. வெ. ரா. நீண்ட நேரம் சொற்பொழிவாற்றினார். மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்:-

1. பட்டக்காரர் மறைவுக்காக அனுதாபம் தெரிவிக்கிறது.

2. செங்கல்பட்டு, ஈரோடு, விருதுநகர் சுயமரியாதை மாநாட்டுத் தீர்மானங்களை இந்த மாநாடு முழுமனதோடு ஆதரிப்பதுடன் அண்மையில் திருச்சியில் நடக்கப் போகும் மாகாண சுயமரியாதை மாநாட்டுக்கு இத்தீர்மானங்களை தீர்மானிக்க சிபார்சு செய்கிறது.

3. சுயமரியாதை மாகாண மாநாட்டின் சமுதாய சம உரிமைத் தீர்மானங்கள் அமலுக்குக் கொண்டுவர நாட்டில் தீவிரப் பிரசாரமும், அதாவது முக்கியமான தீர்மானத்தின் மீது தீவிரக் கிளர்ச்சியும் செய்யவேண்டுமென்று இம் மாநாடு தீர்மானிக்கிறது.

4. சுயமரியாதை இயக்கத் தீவிரக் கிளர்ச்சிக்குத் தொண்டர் கூட்டம் மிகவும் அவசியமானதால் நம் (சேலம்) ஜில்லாவில் ஒரு தொண்டர் படையும் அதற்கு 1000 பேர்களுக்குக் குறையாத தொண்டர்களைப் பதிவு செய்து பயிற்சி கொடுக்கவேண்டுமென்றும் அதற்கு வேண்டிய காரியத்தைத் தலைவர் செய்யவேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறது.

5. ஜில்லாவில் திராவிடர் கழகங்களில் அங்கத்தினர்கள் சேர்க்கவேண்டுமென்றும் ஆங்காங்கு கிளைகள் ஏற்படுத்தவேண்டுமென்றும் இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

6. விவசாயத்திற்காக விவசாயிகளுக்கு எலக்டிரிக் மூலம் தண்ணீர் இறைக்கும் பம்புசெட்டு சர்க்கார் உதவவேண்டுமென்று இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

குடந்தையில் பெரியார் ராமசாமி

3-9-45 மாலை 5 மணிக்கு கும்பகோணம் அரசினர் கல்லூரிப் பொதுப் பேரவை, தமிழ்ப் பேரவைகளின் சார்பில் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களுக்கு ஒரு தேநீர் விருந்தளிக்கப்பட்டது. அதன் பின்னர் கல்லூரித் துணைத் தலைவர் தோழர் டி. எம். மார்க்கசகாயம் செட்டியார் எம். ஏ., பி. எல்., எல். டி., தலைமையில் தமிழ்ப்பேரவையின் தொடக்கவிழா நடைபெற்றது. பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் "தமிழ்" என்பது பற்றிச் சொற்பொழிவாற்றினார். இவ்விழாவிற்கு உள்ளூர் பிரமுகர்களும், உத்தியோகஸ்தர்களும், ஆசிரியர்களும், ஏராளமாகக் குழுமியிருந்தனர். கல்லூரிமண்டபத்திற்கு வெளியில்கூட்டம் நடைபெற்றது. ஒலிபெருக்கி அமைக்கப்பட்டிருந்தது. செயலாளர் தோழர் இரா. சொக்கப்பா யாவரையும் வரவேற்றுப் பேசினார். தலைவர் முன்னுரைக்குப் பின் பெரியார் பேசுகையில் தற்காலத் தமிழின் நிலை மிக்கப் பரிதாபகரமாக இருக்கிறதென்றும், அரசியல், மதம், வாணிபம் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனது உரிய இடத்தை இழந்து நிற்கிறதென்றும், சொந்த நாடாகிய திராவிடத்திலேயே நான்காகப் பிரிந்திடக்கிறதென்றும், இந்நிலை மாற்றியமைக்கப்படவேண்டுமென்றும், தமிழ் என்றவுடனேயே வேற்று மொழியிடம் பகை கொள்ளுதல் விரும்பத்தக்கதல்லவென்றும், எவரும் பழமையிலேயே ஊறிக் கிடப்பதை விட்டு காலத்திற்கேற்றவண்ணம் மாறுதலைக் கைக்கொள்ளாவிடில், மடிந்துபோக வேண்டி வருமென்றும், அவசியமற்ற ஆரியமொழிச் சொற்கள் தமிழில் கலப்பதால் [illegible]கேடொன்றும் ஏற்பட்டுவிடாதென்றும், உலக மொழிகளோடு தமிழும் முன்னேற்றப்பாதையில் செல்லவேண்டுமானால் தேவையில்லாத எழுத்துக்கள் குறைக்கப்பட வேண்டுமென்றும், நாட்டிலுள்ள படிப்பின்மையைப் போக்க இது ஒன்றே சரியான வழியென்றும், திராவிடத்திலுள்ள நான்கு மொழிகளையேனும் ஒன்றுபடுத்தற்குரிய முயற்சி எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

தமிழாசிரியர் தோழர் பொன்னப்பா நன்றி கூறினார்.

பின்னர், புதிதாக திறக்கப்பட்டுள்ள பார்ப்பனரல்லாதார் புலால் உணவு விடுதியைப் பெரியார் பார்வையிட்டார். அங்கு ஒரு சிறு தேநீர் விருந்து நடந்தது.

3-9-45 பகல் 11மணிக்கு கும்பகோணம், பேட்டை செல்லுகடைத்தெருவில் நடைபெற்ற தோழர்கள் பொன்னம்பலம்—பட்டம்மாள், சாம்பசிவம்—கமலம்மாள் திருமணத்தில் பெரியாரவர்கள் "சீர்திருத்தத்திருமணம்" பற்றிப் பேசினார்.

அன்று இரவு கும்பகோணம் ராஜா டாக்கீஸில் நடந்த "கருங்காலவீரன்" என்ற, திருநாகேசுவரம் புத்தலக சீர்திருத்த நாடகசபா நிதிக்காக நடத்தப்பட்ட நாடகத்தில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் "நாடகக்கலை" பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

திருநெல்வேலி சமாதானபுரத்தில் நடைபெற்ற தோழர்கள் தியாகராஜன்—சரோஜனி திருமணத்தை ஒட்டி பம்பாய், தாராவியில் தோழர் பி. எஸ். வடிவேல் அவர்களால் ஒரு உபசாரக் கூட்டம் நடத்தப்பட்டது. தோழர் சவரிதாசன் தலைமையில் தோழர்கள் பாலகிருஷ்ணன், பெரியசாமி பேசினர். இதன் நினைவாகக் "குடி அரசு"க்கு ரூ 1 நன்கொடை அனுப்பப்பட்டது.

பகுத்தறிவு வால்யூம்

விற்பனைக்குத் தயார்

35 ஜூன் முதல் மார்ச்சு 36 வரை 9, 10 மாதங்கள் கொண்டது விலை ரூ. 1-8-0, 1-10-0, புக்போஸ்டில் அனுப்ப 6 அணா, ரிஜிஸ்டர் புக்போஸ்டு செலவு அணா 9.

1937ஆம் வருட பகுத்தறிவு பைண்டு வால்யூம் விற்பனைக்குத் தயார் ஆகிவிட்டது. ('37 ஜூன் முதல் '38 ஏப்ரல் வரையுள்ள புத்தகங்களில் '37 மே மாதம் புத்தகம் நீக்கி 11-புத்தகங்கள்கொண்ட வால்யூம்) விலை ரூ. 1-12-0. தபால் செலவு வேறு. (புக்போஸ்டில் அனுப்ப 6 அணா. ரிஜிஸ்தர் புக்போஸ்டில் அனுப்ப 9-அணா)

'38 மே முதல் '39 ஜனவரி முடிய 9-மாதங்கள் கொண்ட பைண்டு வால்யூமுக்கு விலை ரூ. 1-8-0. தபால் செலவு தனி. (புக்போஸ்டில் அனுப்ப 5-அணா. ரிஜிஸ்தர் புக்போஸ்டில் அனுப்ப 8-அணா)

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

ரோஜா முத்தையா

கைத்தறி துணிகளுக்குத் தடை

(கைத்தறி துணிகள் வெளி மாகாணங்களுக்குப் போகக் கூடாது என்னும் தடையை ரத்து செய்ய வேண்டுகோள். சேலம் செவ்வாய்ப்பேட்டை நூல் விநியோகக் கமிட்டி காரியதரிசி ஏ. கே. வரதராஜுலு எழுதியது.)

நம்மாகாணத்தில் உற்பத்தியாகும் கைத்தறித் துணிகளை வெளி மாகாணங்களுக்கும் மைசூர், ஹைதராபாத், புதுக்கோட்டை முதலிய சமஸ்தானங்களுக்கும், இலங்கை முதலிய வெளிநாடுகளுக்கும் போகக் கூடாது என்னும் தடை போடப்பட்டிருந்தது. கைத்தறி ஜவுளி மார்க்கெட் மிகவும் மந்தமாக இருக்கிறது. தவிர இப்பொழுது ஜப்பானிய யுத்தம் நின்றுவிட்டபடியால் பல மில்களில் துணிகள் மிலிடெரிக்கு சப்ளை செய்து வந்ததை சிவிலியன்களுக்குச் சப்ளை செய்யும்படி உத்திரவுகள் வந்து இருப்பதாகத் தெரியவருகிறது. ஆகையால் இம்மாதிரியான நெருக்கடியில் இன்னும் நம் மாகாணத்தைவிட்டு வெளிப்பிரதேசங்களுக்கு அனுப்பக்கூடாது என்னும், தடை நீடித்துக்கொண்டே போனால் நெசவுத் தொழிலாளர்களாகிய நாங்கள் ரொம்பவும் கஷ்டத்திற்குள்ளாக வேண்டியவர்களாகிறோம். இந்த தடையின் காரணமாக நெசவு முதலாளிகள் இப்பொழுதே தறிகள் புனைப்பதில்லை என்று நிறுத்தி வருகிறார்கள். நெசவு தொழிலாளர்களிடமே வெளிப்பிரதேசங்களுக்கு அனுப்புவதற்கு என்று தயார்செய்த ஜவுளிகள் ஏராளமாக விற்பனை ஆகாமல் தத்தளிக்கிறார்கள். இதில் சம்பந்தப்பட்ட மாகாண அதிகாரிகளுக்கு பல தடவை நேரில் கூறியும் லெட்டர் மூலம் எழுதியும் அவர்கள் கவனிப்பதாக தெரியவில்லை. நம் மாகாணத்திலிருந்து வெளி மாகாணத்திற்கு துணிகள் அனுப்பக்கூடாது என்று சொன்னால் வெளி மாகாணங்களிலிருந்து நம் மாகாணத்திற்கு துணிகள் வருவதேன்? இது விஷயங்கள் பெரிய அதிகாரிகளைக் கேட்டால் அதிகாரிகள் தக்க பதில் சொல்லுவது கிடையாது. ஆகவே யுத்தமோ நின்றுவிட்டது. ஜவுளிகள் வெளிநாடுகளிலிருந்தும் வெளி மாகாணங்களிலிருந்தும் மில் துணிகள் ஏராளமாக வரப்போகின்றன. மிலிடெரிக்கு சப்ளை செய்து வந்த மில் துணிகளை அப்படியே சிவிலியன்களுக்கு சப்ளை செய்ய உத்திரவுகள் வந்துகொண்டு இருப்பதாலும், மில் துணிகளிடம் கைத்தறி துணிகள் போட்டிபோட முடியாததாலும் உடனே மேற்படி தடையுத்திரவை ரத்து செய்துவிடவேண்டும்.

அப்படி ரத்துசெய்யத் தவறினால், நெசவுத் தொழிலாளர்களுக்கு மிகுந்த கஷ்டங்கள் ஏற்படும். இதனால் பலவிதமான கிளர்ச்சிகள் ஏற்பட நேரிடும்போல் தோன்றுகிறது. ஆகையால் இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனே கவனித்து வேறு மாகாணங்களுக்கும், சமஸ்தானங்களுக்கும் போகக்கூடாது என்னும் தடையை ரத்துசெய்து நெசவாளர்களுக்கு நன்மை செய்வீர்கள் என்று எதிர்பார்க்கிறோம். இது விஷயமாக சேலத்தில் டவுன் நெசவுத்தொழிலாளர்கள் மாநாடு அக்டோபர் முதல் வாரத்தில் நடைபெற ஏற்பாடு செய்கிறோம். அதற்கு எல்லா நெசவுத் தொழிலாளர்களும் ஆதரவு கொடுக்கவேண்டுகிறோம்.

ஏ. கே. வரதராஜுலு, காரியதரிசி, தேவாங்கபுரம் கைத்தறி நெசவாளர்கள் சங்கம், சேலம் செவ்வாய்ப்பேட்டை.

தென்னாற்காடுமாவட்ட தோழர்களுக்கு

திருச்சி மாநாடுகளுக்கு நாட்கள் நெருங்கிவிட்டன. நமது மாவட்டத்திலிருந்து வருவோர் தொகை மிகக் குறைவாயிருக்கிறது. பிற மாவட்டங்களைப் போல் நாமும் நமது கடமையையாற்றவேண்டுமென்ற கவலை வேண்டாமா? டிக்கட்டுகள் பெற்றுள்ள தோழர்கள் உடனே இயன்றதை வசூலித்து இன்றே அனுப்பிவைக்க வேண்டுகிறேன்.

ஆ. திராவிடமணி.

ஆத்தங்குடி திராவிடர் கழகச் செயலாளர் தோழர் நாரா. லட்சுமியப்பன் அவர்களால் 10-9-45 அன்று பெரியார் பிறந்த நாளை முன்னிட்டுச் சிறுவர்களுக்கு மிட்டாய் வழங்கப்பட்டது.

மறைவு

அமைந்தகரை திராவிடர் கழக உறுப்பினர் தோழர் என். துரைராசன் 12-9-45 அன்று இயற்கையடைந்தமைக்காக அக்கழகத்தார் அன்னாரின் குடும்பத்துக்கு அனுதாபம் தெரிவிக்கின்றனர்.

o o

திண்டிவனத்தில் தன்மதிப்புக் கொள்கைகளுக்காக அரும்பாடுபட்டுக் கடைப்பிடித்து வந்த தோழர்கள் என். எ. ரஹீம், க. குப்புசாமி, ஆகியோர் மறைவுக்காக திண்டிவனம் திராவிடர் கழகத்தார் அனுதாபம் தெரிவிக்கிறார்கள்.

o o

பரிக்கல்பட்டு தோழர் வெங்கடகிருஷ்ணரெட்டியார் புதல்வரும், திருப்பாப்புலியூர் திராவிடர் கழக உறுப்பினருமான தோழர் கிருட்டினராச 27-8-45-ல் மறைந்தது பற்றி 6-9-45 காலை 10-மணிக்கு பரிக்கல்பட்டியில் சடங்குகள் இன்றி கொண்டாடப்பட்ட நீத்தார் நினைவு நாளில் தோழர் ஆ. திராவிடமணி பி. ஏ., சொற்பொழிவாற்றிய பின் யாவருக்கும் விருந்தளிக்கப்பட்டது.

o o

திருச்செந்தூர், இலமாகுளம் தோழர் எஸ். எ. பிரகாசம் அவர்கள் தந்தையார் எஸ். சவரிமுத்து அவர்கள் தன் 57வது வயதில் 29-8-45 அன்று இயற்கையடைந்ததற்கு வருந்தி, தன் அனுதாபம் தெரிவித்துக்கொண்டு கொழும்பு தோழர் எஸ். பி. பெருமாள் 'குடி அரசு'க்கு ரூ. 2, நன்கொடை அனுப்பியுள்ளார்.

o o

தாழ்த்தப்பட்ட சமூக முன்னேற்றத்துக்கு உழைத்து வந்த தோழர் பொன்னு ஜோசப் இயற்கையடைந்ததற்கு வருந்தி திருச்சி அருள் ஞாபக வாசகசாலையார் தம் அனுதாபம் தெரிவிக்கின்றனர்.

o o

திருப்பாதிரிப்புலியூர் மாணவத்தோழர் கிருட்டினராசு என்பவர் மறைவுக்காக மேற்படியூர் திராவிட இளைஞர் கழகத்தார் அனுதாபம் தெரிவிக்கின்றனர்.

'குடி அரசு' பைண்டு வால்யூம்

"குடி அரசு" பைண்டு வால்யூம்கள் விற்பனைக்குத் தயாராக இருக்கிறது) 4-வது வருட முதல் 13-வது வருடம் வரை (6-வது வருடம் நீங்கலாக) கிடைக்கும். ஒரு வருட வால்யூமின் விலை ரூ. 5-0-0. தபால் செலவு பிரத்யேகம். வால்யூமின் எடை அதிகமாக இருப்பதால், ரயில் பார்சல் மூலம் வரவழைத்துக் கொள்ள சௌகரியமுள்ளவர்கள் ஆர்டர் கொடுப்பது நலம்.

"குடி அரசு" பதிப்பகம்,
ஈரோடு

ரோஜா முத்தையா

திராவிடக் கழகங்கள்

பொன்மலை திராவிட வாலிபர் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் தோழர் எஸ். நடராஜன் தலைமையில் 11-9-45 மாலை நடைபெற்றது. ஆண்டுவிழா வரவுசெலவுக் கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டு, தோழர் துரைசாமி பிள்ளை (பொன்மலை), பழயகோட்டைப் பட்டக்காரர், அக்கமுத்து அம்பலகாரர் (திருச்சி) முத்துக்கிருஷ்ணன் பாட்டியார் (பொன்மலை) ஆகியோர் மறைவு குறித்து அநுதாபம் தெரிவிக்கப்பட்டது. புதியகுடத் தேர்தலை 18-9-45ல் நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

0 0

குறிஞ்சிப்பாடி திராவிடர் கழகக் கமிட்டிக் கூட்டம் தோழர் பழனிச்சாமி அவர்கள் தலைமையில் கூடி கழக ஆண்டுவிழாவை அக்டோபர் முதல் வாரத்தில் நடத்துவதென்றும், அதற்குத் தளபதி சி. என். அ., பெரியார் ராமசாமி, தோழர் இளம்வழுதி ஆகியோரை அழைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டு, இவ்வேலைகளுக்காகத் தோழர்கள் பழனிசாமி, சரவணன், குப்புசாமி முதலியார், சொக்கலிங்கம், நாராயணசாமி ஆகிய ஐவர் கொண்ட கமிட்டி நியமிக்கப்பட்டது.

0 0

மேலகந்தண்டார்கோட்டை திராவிடர் கழக உறுப்பினர் கூட்டம் தோழர் கணேசன் தலைமையில் 12-9-45-ல் கூடி, திருச்சியில் மாகாண மாநாடு கூட்டப்படுவதற்கு மகிழ்ச்சியடைவதாயும், இதற்கு பெரியாரையே தலைவராகப் போட வேண்டுமென்றும், இம்மாநாட்டுக்காக அங்கிருந்து 100 தொண்டர்கள் வாலண்டியராகச் செல்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

0 0

காட்டூர் கொத்தமங்கலம் திராவிடர் கழக ஆரம்பவிழா தோழர் சு. மு. இளம்பன் தலைமையில் 25-8-45 மாலை நடைபெற்றது. தோழர்கள் வீ. கந்தசாமி தலைவர் & பொருளாளர், சி. குழந்தைவேல் துணைத்தலைவர், ப. ராமசாமி செயலாளர், எ. சேவியர் துணைச்செயலாளர், மற்றும் பலர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

0 0

காரைக்குடி திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் 11-9-45-ல் தோழர் லெ. நாராயணன் தலைமையில் கூடி திருச்சியில் நடைபெறும் திராவிடர் கழக மாகாண மாநாட்டுக்குத் தலைவராகப் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களையே தெரிந்தெடுக்கவேண்டும் என்றும், கழகவளர்ச்சி சம்பந்தமாகவும், பிரதிநிதி தெரிவிப்பது சம்பந்தமாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

0 0

காஞ்சீபுரம், பிள்ளையார்பாளையம் சமதர்ம இளைஞர் சங்கத்தின் சார்பில் 14-9-45 மாலை தோழர் சச்சபாலைய முதலியார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கழகத்தின் பெயர் திராவிடர் கழகமென மாற்றப்பட்டு, தோழர்கள் பொ. சிவலோ தலைவர், த. கந்தசாமி பொருளாளர், அ. அய்யம்பெருமாள் செயலாளர், எ. கோவிந்தன் துணைச் செயலாளர், மற்றும் அறுவர் உறுப்பினர் என்ற தேர்தல் நடைபெற்றது.

0 0

கன்னிமங்கலம் திராவிட வாலிபர் கழகத்தார் திருச்சி மாநாட்டுக்கு, தங்கள் ஊரில் இறந்தவர்களை மயானத்துக்குப் பொதுப் பாதையில் கொண்டு செல்வதை சிலர் தடுப்பதால் இதற்கு உரிமை வேண்டுமென்றும், குடி தண்ணீர் வசதிக்கு கிணறு வெட்டித் தரவேண்டுமென்றும் இரு தீர்மானங்கள் அனுப்பியுள்ளனர்.

0 0

திருவத்திபுரத்தில் 30-8-45ல் சி. என். அ. அவர்களால் திறக்கப்பட்ட "சபாபதி யாதை திராவிடர் கழகம்," "இளைஞர் படிப்பகம்" ஆகியவற்றின் நினைவாக "குடி அரசு"க்கு ரூ. 3 அன்பளிப்பாக அனுப்பப்பட்டது.

0 0

திருச்சி, சுண்ணாம்புக்காரத் தெரு என்னும் குரும்பர் தெருவில் தோழர் டி. எ. மாணிக்கவாசகம் தலைமையில் 16-9-45 அன்று திராவிட இளைஞர் கழகம் தொடங்கப்பட்டது. தோழர்கள் கிராஸ்சிஸ், வைத்தியம் சொற்பொழிவாற்றினர். தோழர்கள் டி. என். ராமச்சந்திரன் தலைவர், டி. கே. பெரியசாமி துணைத்தலைவர், ஜி. பாலகிருஷ்ணன் பொதுச்செயலாளர், எ. கணேசன் துணைச்செயலாளர், திருவேங்கடம் அண்ணாசாமி பொருளாளர் என்று தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

0 0

கோயமுத்தூர் திராவிடர் கழகச் சார்பில் 11-9-45 அன்று தோழர் எஸ். ஆர். சுப்ரமணியம் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பெரியார் ஈ. வெ. ராமசாமி, தோழர்கள் எ. பி. ஜனார்த்தனம், இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

0 0

சென்னிமலை திராவிடர் கழகப் பொதுக் கூட்டம் ஒன்று 12-9-45 அன்று திருப்பூர் தோழர் எஸ். ஆர். சுப்ரமணியம் தலைமையில் நடந்தது, தோழர்கள் குரு ராமலிங்கம், ஈ. வெ. கி. சம்பத், எ. பி. ஜனார்த்தனம் ஆகியோர் பேசினர்.

திருமணங்கள்

காரைக்குடி தோழர்கள் அழகிரிசாமிக்கும், குழந்தையம்மாளுக்கும் 9-9-45-ல் தோழர் வி. எஸ். சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற சீர்திருத்தத் திருமணத்தின் நினைவாகக் "குடி அரசு"க்கு ரூ 1 நன்கொடை தரப்பட்டது.

0 0

திருமருகலில் 9-9-45-ல் நடைபெற்ற தோழர்கள் பாலசுப்ரமணியம்—ருக்மணி திருமண நன்கொடையாகக் "குடி அரசு"க்கு ரூ. 1 அனுப்பப்பட்டது.

0 0

கண்டனூரில் 26-8-45-ல் தோழர் கஞ்சையா பிள்ளை தலைமையில் நடந்த தோழர்கள் துரைசாமி—விசாலாட்சி தமிழ்த் திருமண நினைவாகக் "குடி அரசு"க்கு ரூ 1 அளிக்கப்பட்டது.

0 0

மதுரையில் 9-9-45-ந் தேதி தோழர் பழனிச்சாமிக்கும், அனந்தம்மாளுக்கும் தோழர் கு. முத்துசாமி தலைமையில் நடைபெற்ற திருமணத்தின் நினைவாகக் "குடி அரசு"க்கு ரூ 1 நன்கொடை வரப்பெற்றோம்.

0 0

சென்னையில் 9-9-45-ல் தோழர் அன்பழகன் தலைமையில் தோழர்கள் பி. எஸ். மணி, டி. அந்தோனியம்மாள் ஆகியோருக்குச் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. தோழர்கள் ராமநாதன், நடராஜன், சார்தலிங்கம், ராஜன் முதலியோர் சொற்பொழிவாற்றினர்.

0 0

திருத்துறைப்பூண்டி தாலுகா தென்னம்புலம் கிராமத்தில் தோழர் நடராசன் தலைமையில் 9-9-45-ல் தோழர் கிருஷ்ணனுக்கும், தோழர் பார்வதிக்கும் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது.

தோழர்கள் அப்துல்லா, அரங்கண்ணல், சண்முகசுந்தரம், தயுமானவன், சுப்பையா, முருகேசன், ஆகியோர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்வை பார்க்கிறார்கள். பலர் ராஜாசிற்குப் பூஜை சடங்குகள் செய்கிறார்கள். பலர் அம்மன் பிரசாதத்திற்கும், பலர் ராஜசேவைக்கும் எதிர்பார்த்து நிற்கிறார்கள். பார்ப்பனர்களுக்குத் தானதருமங்கள் கொடுக்கப்படுகின்றன. குருவான சங்கராச்சாரியார் ஆசீர்வாதம் செய்துகொண்டிருக்கிறார். வந்த பார்ப்பனருக்கெல்லாம் பூரி தட்சணையுண்டு. வாண வேடிக்கையும், மத்தாப்பு வெளிச்சமுமுண்டு, சதிர்சங்கீதமுண்டு. வெள்ளைக்காரர்களுக்கு விருந்துண்டு.

—கைவல்யம்

ஆகியோர் விரிவுரையாற்றினார்கள். இத் திருமணத்தின் அறிகுறியாகக் "குடி அரசு"க்கு ரூ. 1 நன்கொடையளிக்கப் பட்டது.

o o

சென்னை பறங்கிமலை யருகில் 9-9-45 அன்று தோழர் மேத்திய ராஜிக்கும், தோழர் பத்மாவதிக்கும், தோழர் சத்தியவாணிமுத்து தலைமையில் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. தோழர்கள். தங்கராஜ், ராமன், முத்து, முனுசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

* *

திருவாங்கூரைச் சேர்ந்த மாதவனூரம் என்ற ஊரில் 9-9-45-ல் தோழர் ப. ஜீவானந்தம் தலைமையில் தோழர்கள் சீ. மதியழகன், சுவாமி ஆகியோரால் நடத்தி வைக்கப்பட்ட தோழர்கள் திருமலைசாமி, இராசாம்பாள் திருமணத்தை முன்னிட்டு "குடி அரசு", "திராவிடநாடு" இதழ்களுக்கு ரூ 1 வீதம் நன்கொடை அனுப்பப்பட்டது

* *

பின்னவாசலில் தோழர் டி. பி வேதாசலம் தலைமையில் 2-9-45 அன்று நடைபெற்ற தோழர்கள் பொன்னுசாமி-ரஞ்சிதம் திருமணத்தில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் சொற்பொழிவாற்றினார்.

o o

கும்பகோணம் பேட்டை சைவத் தெருவில் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற தோழர்கள் பொன்னம்பலம்—பட்டம்மாள், சாம்பசிவம்-மனோம்பாள் ஆகியோரின் புரட்சித் திருமணங்களின் நினைவாகக் "குடி அரசு", "திராவிடநாடு" இதழ்களுக்குத் தலா ரூ 1 வீதம் நன்கொடையளிக்கப்பட்டது.

o o

திருவத்திபுரம் தோழர்கள் பாலசுந்தரம்-உண்ணாமுலை வாழ்க்கை ஒப்பந்தம் தோழர் மயிலை சிவ. முத்துக்குமாரசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சி. வே. சுப்பராயன், காஞ்சி கலியாணசுந்தரம், சென்னை நகர முத்து ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இத்திருமணத்தின் நினைவாகக் "குடி அரசு"க்கு ரூ. 1 நன்கொடை வழங்கப்பட்டது.

o o

ஈரோடு தோழர் என். வேதநாயகம் சகோதரி தோழர் பார்வதியும் கோவை ரிசர்வ் போலீஸ் கான்ஸ்டபிள் தோழர் ஆர். மாரிமுத்தும் 12-9-45ல் கோவை ஜில்லா ரிஜிஸ்ட்ரார் முன்னிலையில் தங்கள் திருமணத்தைப் பதிவு செய்து கொண்டனர். தோழர்கள் ஏ. சித்தையன், இரா. செஞ்சொழியன், பி. சண்முக வேலாயுதம் ஆகியோர் சாட்சிக் கை யொப்பமிட்டனர்.

திராவிட நாட்டுச் செய்திகள்

கோபி தாலுக்கா மருத்துவர் மாநாடு 9-7-45-ல் நடைபெற்றதற்கு மொத்த வசூல் ரூ. 423-12-0 என்றும் செலவு ரூ 302-5-0 போக இருப்பு ரூ. 121-7-0 என்றும் டை சங்கத்தார் அறிவிக்கின்றனர்.

* *

குளித்தலை விசுவகுல தொழிலாளர் சங்கக் கூட்டம் 6-9-45 இரவு தோழர் பத்திரையாச்சாரி தலைமையில் நடந்தது. நடப்பு ஆண்டுக்கு நிர்வாகிகள் தெரிந்தெடுக்கப்பட்ட பின், பல தோழர்கள் பேசினார்கள். தோழர் பிச்சை நன்றி கூறினார்

* *

சேலம், செவ்வாய்ப்பேட்டை அயலகியாதை சங்கக் கூட்டம் 6-9-45 இரவு தோழர் ஆர். எஸ். அருணாசலம் தலைமையில் கூடி. திருச்சியில் நடைபெறப் போகும் இரு மாநாடுகட்கும் பெரியார் தான் தலைமைதாங்கவேண்டுமெனவும், பட்டக்காரர் மரணத்துக்கு அநுதாபம் தெரிவிப்பதையும் தீர்மானித்தது.

* *

பம்பாய், தாராவி, திராவிடநாடு பகுத்தறிவு நிலையத்தின் மாதாந்தரக் கூட்டம் 26-8-45 மாலை தோழர் சவரிதாசன் தலைமையில் கூடியது. பல கடிதங்கள் படித்துக் காட்டப்பட்ட பின் 16-ந் தேதி பெரியார் ஈ. வெ. ரா. பிறந்த நாள் விழாக் கொண்டாடவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

o o

அருப்புக்கோட்டை தோழர் மீ. அருணாசல நாடார் மகன் தோழர் வரதராஜனுக்கும், திருச்சுழி தோழர் வள்ளிய நாடார் மகள் தோழர் சாவித்திரிக்கும் தோழர் சொக்கலிங்க பாண்டியர் முன்னிலையில் நடைபெற்ற சீர்திருத்தத் திருமணத்தில் தோழர் மு. ஆ. சுப்பிர நாடார் சொற்பொழிவாற்றினார். இதன் ஞாபகமாக "குடி அரசு" வளர்ச்சிக்கு ரூ. 1 அளிக்கப்பெற்றது.

o o

மதுரை, தல்லாகுளம், தோழர்கள் பி. பூசாரி—சே. தெய்வானையம்மாள் சீர்திருத்தத் திருமணம் தோழர் ராமசாமி முன்னிலையில் நடைபெற்றதன் நினைவாக 'குடி அரசு"க்கு ரூ. 1 அளிக்கப்பட்டது.

o o

திருநெல்வேலிப்பேட்டையில் 14-9-45 அன்று தோழர் அ. ராமச்சந்திரனுக்கும் தோழர் சந்திரம்மைக்கும் தோழர் மயிலை-சிவ-முத்துக்குமாரசாமி தலைமையில் திருமணம் நடைபெற்றது. தோழர்கள் க. அன்பழகன், என். வி. நடராஜன், சி. ஜி. ராஜா, சடகோபன், மாதவன், செல்வேன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

* *

நெல்லை மாவட்டம் மேலப்பாளையம் கிராமம் கருங்குளம் மேலத் தெருவில் 25-8-45 இரவு தோழர் கே. எம். பிரமநாயகம் அவர்கள் தலைமையில் பெரியார் புத்துணர்ச்சி இளைஞர் கழக இரண்டாம் ஆண்டுவிழா சிறப்புற நடைபெற்றது. தோழர்கள் ஏ. வி. முத்தையா (திராவிடர் கழகத் தலைவர்) முத்துக்கிருஷ்ணன், ஏ. அருணாசலம், பி சமதர்மம், ஆர். ஜே. செல்லையா, என். கருப்பையா, எஸ். சாமுவேல், ஆகியோர் சொற்பொழிவாற்றினர். டை கழகத் தலைவர் கே. எஸ். சண்முகம் நன்றி கூறினார்.

* *

கோவை மருத்துவர் கூட்டமொன்று 6-9-45-ந் தேதி நடைபெற்றது. தோழர்கள் கருப்பன், ரங்கராஜு பேசியபின், நேசநாடுகளின் வெற்றிக்கு மகிழ்ந்தும், பட்டக்காரர் மறைவுக்கு வருந்தியும், தமது சங்க ஆண்டு விழாவை 25ந் தேதி நடத்துவதென்றும் தீர்மானங்கள் நிறைவேறின. தோழர் கணபதி நன்றிகூறினார்.

* *

ராஜபாளையம் பாரதிதாசன் நிதிக் கமிட்டியின் மொத்த வசூல் ரூ. 721 என்றும், செலவு ரூ. 171 போக கவிஞருக்களிக்கப்பட்டது ரூ. 550 என்றும், நிதிக்கமிட்டி கலைக்கப்பட்டதென்றும், டை நிதிக்கு உதவியவர்களுக்கு வணக்கம் தெரிவிப்பதாயும் செயலாளர் அறிவிக்கிறார்.

* *

7-8-45ல் நடைபெற்ற சிதம்பரம் மருத்துவர் சங்கத் தேர்தலில் தோழர்கள் சாமிநாதன் தலைவர், கோபாலகிருஷ்ணன் செயலாளர், டாக்டர் சாமிநாதன் காப்பாளர், வெங்கடாசலம் பொருளாளர், மூர்த்தி துணைத்தலைவர், முத்து துணைச்செயலாளர் என்று தெரிந்தெடுக்கப்பட்டனர்.

* *

திருச்செங்கோட்டில் 2-9-45-ல் நடைபெற்ற சு. ம. இயக்கத் தோழர்களின் கூட்டத்தில் தோழர் எல். கே. ஏ. ராஜு அவர்களைத் தலைவராகவும், மற்றும் சிலரை நிர்வாக உறுப்பினராகவுங்கொண்டு ஒரு சுயமரியாதைச் சங்கம் திறக்கப்பட்டது. பழயகோட்டை பட்டக்காரர் மறைவுக்கு அநுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* *

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42 Cutchery street, Erode.

ரோஜா [illegible] ...ச்சி நூலக அறக்கட்டளை